


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்யசாயி காட்டும்

# பிரேமயோகம்

தொகுப்பு: ஓர் சாயி அன்பன்

(அகில இலங்கை சத்யசாயி சேவா நிறுவனங்களின்
இணைப்புக் குழுவின் அனுமதியுடன்)

வெளியீடு:
மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

பகவானின் பக்தன் என நம்மை நாமே சொல்லிக்கொண்டிருப்பதைவிட அவர் காட்டிய வழியிலே பின் செல்லலே நாம் அவருக்கு செய்யக்கூடிய கைமாறாகும். பகவான் ஒரு பக்தன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைத் தெளிவாகக் கூறியுள்ளார். அதில் பகவானின் போதனைகளை பரப்புதல் (2) சுவாமியின் அருளுரைகள், போதனைகள், இலக்கியங்கள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தல், (3) தன்னலமற்ற சேவை செய்தல். இந் நோக்கங்களை மையமாகக் கொண்டே சாயி நிறுவனங்கள், நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

எங்கள் நிலையம் ஏனைய நிலையங்கள் போலன்றி மேற்கூறிய நோக்கங்களைப் பூர்த்திசெய்ய சற்று பின்தங்கியே இருந்தது. ஆனால் நாங்கள் மேற்கூறியவாறு பின்பற்றிச் செயல்பட கனவு கண்டுகொண்டிருக்கிறோம். சுவாமியின் சேவையை இதய சுத்தியுடன் செய்வோரை சுவாமி ஒருபோதும் கைவிடமாட்டார். அதேபோல் எமது கனவையும் கூட நனவுகளாக்கிவிட்டார். அவரின் அருளும் ஆசியும் எமக்கு வரப் பெற்று காலமும் கனிந்தமையினால் எங்கள் கன்னி வெளியீடான இந் நூலை உங்கள் அன்புக் கரங்களில் தவழவிடுவதில் திருப்தி அடைகிறோம்.

சாயி பக்தன் எவனும் தான் செய்கிற சேவைகளுக்கு எந்தவித விளம்பரத்தையோ, பெயரையோ, புகழையோ, விரும்புவதுமில்லை. நாடுவதுமில்லை. எங்கள் கனவை நனவாக்க, திக்கற்றவருக்கு தெய்வமே துணை' என சான்றோர் கூறுவதுபோல சுவாமியும் ஒரு சில பக்தர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் மூலம் இப் பெரிய கைங்கரியத்தை செய்து முடித்துள்ளார் என்றே கூற வேண்டும். நிதி நிலைமையிலும், நூலைத் தெரிந்தெடுக்கும் நிலைமையிலும் திக்கற்றவராகவே இருந்தோம். நிதி நிலைமையில் சாயி பக்தன் ஒருவர் இப் பெருஞ் சேவைக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். அதேபோல் இந்நூலில் கூறப்பட்ட கருத்துக்களை, முறையாகத் தொகுத்து நூல் வடிவில் இன்னொரு பக்தன் வழங்கினார்.

இந்நூலினை சரவை நோக்கியும், புத்தக அமைப்பிலும் கவனம் செலுத்தியவர் யாழ்ப்பாணம் மத்திய சமித்தித் தலைவர் ஆ. இராஜகோபால். இந்நூலைச் சிறப்புற அச்சிட்டு குறுகிய காலத்தில் வழங்கியவர்கள் மணி ஓசை அச்சகத்தினர். இவர்களனைவருக்கும் பகவானின் அருளாசி வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

18-5-91

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50வது அவதாரப் பிரகடன விழாவின் போது, பரப்பிரம்மம் ஒரு மேனியாகி, கருணை கூர் முகத்துடன் பூமிக்கு வந்து, சரியாக மூன்றில் இரண்டு பங்கு வருடங்களை முடித்த வேளையில் — செய்த பகிரங்க வேண்டுகோள்.

நான் உங்களை வேறொன்றும் கேட்கவில்லை.
பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.
ஒவ்வொருவருமே கடவுளின் குழந்தை எனக்
கருதுங்கள்.
வெறுப்புணர்வை விட்டொழியுங்கள்.
எவருக்கும் மனத்தாலும் சொல்லாலும்
செயலாலும தீங்கிழையாதீர்கள்.
விசால மனப்பான்மையை இதயத்தில்
வளர்த்துக் கொள்ளுங்கள்"

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா

(சனாதன சாரதி – நவம்பர், பக்.6)
23. 11. 91 அன்று பகவான் செய்த
65. வது பிறந்த தின அருளுரையிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் போதனைகளை பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும் அறியப்படுத்தக் கூடிய போதிய நூல்கள் தமிழில் இல்லை என்ற குறையை, சில காலமாக சாயி நிறுவனங்கள் நன்றாக உணர்ந்திருக்கின்றன. அந்தக் குறையை நீக்க வேண்டும்என்ற சிந்தனையும் பரவி இருக்கின்றது. சுவாமியின் அவதாரப்பிரகடனப் பொன்விழாவின் பின் இந்தச் சிந்தனை உத்வேகம் அடைந்திருக்கின்றது- மக்களிடையே சாயி நூல்களைப்படிக்க வேண்டும் என்ற அவாவும் வலுப்பட்டிருக்கிறது. செயலில் இறங்க வேண்டும் என்ற சங்கல்பம் ஏற்பட்டு விட்டால் சுவாமியும் துணைபுரிவார் தானே! இலங்கையிலேயே இவ்வருடம் பத்து நூல்கள் வரை வெளியாகிவிடும். அவற்றில் ஒன்று தான் மாணிப்பாய் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தால் வெளியிடப்படும் இந்நூல்.

"சத்திய சாயி காட்டும் பிரேமை யோகம்" அன்பு கொட்டிக் கொண்டிருக்கும் அருமையானதோர் தொகுப்பு. அன்பே கடவுள் என்ற தத்துவத்தை வாசிப்பவர்கள் மனத்தில் பதிய வைக்கும் தன்மையுள்ளது. பிரேமை சொரூபியாகிய பாபாவின் திவ்விய வசனங்களை "சாயி பாகவதம்" என்று சொல்லக் கூடிய "சத்தியம், சிவம், சுந்தரம்" என்ற தொடர் நூல்களிலிருந்து தெரிவு செய்து, மனதை ஈர்க்கும் கவர்ச்சியுள்ள மாலையாகக் கோத்திருக்கின்றார். நூலைத் தொகுத்தவர், சுவாமியின் சேவைக்குத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் அந்த நல்ல பத்தன் தன் பெயரை வெளிப்படுத்த விரும்பவில்லை. பல சாதனைகளிலும், சத்சங்கங்களிலும் பங்கு பற்றும் பொழுது எழுதிவைத்த குறிப்புகளைப் பயன் படுத்தியுள்ளார். வாசகர்களுக்குப் பயன் தரக் கூடிய முறையில் நிரல் படுத்தப்பட்டிருக்கின்றது

மாணிப்பாய் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத் தலைவரும், நிர்வாகிகளும் சுவாமியின் செய்தியைப் பரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பும் தொண்டாக இவ்வருடம் ஒரு நூல் வெளியிட வேண்டும் என்று ஆசைப்பட்டனர். அந்த ஆசையைப் பூர்த்தி செய்ய ஒரு சாயி பத்தன் அநாமதேயமாக முன்வந்து நூல் அச்சிடும் செலவைப் இன்னொரு பக்தன் நூலின் அமைப்பையும், பொறுப் பேற்றார். 'புறாவ்' முதலியஅச்சுக்கூடப் பொறுப்புகளையும் ஏற்றுக் கொண்டார்.

இந்த நல்ல நூலை வெளியிடுவதற்கு முயற்சி செய்த அத்தனை சாயி அன்பர்களுக்கும் பகவானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

செ. சிவஞானம்
அகில இலங்கை பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா
நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர்

1 - 5 - 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டனுரை

"மகிழ்ச்சியும் அமைதியும் வேண்டுமென்றால் அன்பினை வழங்க வேண்டும். உண்மையான மகிழ்ச்சியும், அகத்தில் அமைதியும் அன்பின் மூலம் தான் கிடைக்கும், அன்பினை வளர்ந்து அன்பில் தோய்ந்து வாழுங்கள். தாராளமாகக் கொடுப்பதனாலும் மன்னிக்கும் மனோ பாவத்தைப் பெருக்கிக் கொள்வதனாலும் தான் இந்த அன்புணர்வைப் பெருக்கிக் கொள்ள இயலும். சாயியின் இந்த வாக்கு உங்களை நோக்கிப் பிரவகிக்கும் அன்பு நதியாகும்".

"பரம்பொருள் பிரேமஸ்வரூபன். பரம்பொருளின் அம்சமே மனிதன். சத்தியம சாந்தி இவைகள் இல்லாத மனிதரை உலகில் காணவே முடியாது. இது எல்லா மனிதர்களிடமும் சுடரொளி வீசிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள எந்த வகையிலாவது உலக வாழ்க்கையை அனுபவிக்கலாம்; ஆனால் அடிப்படையில் அன்பு உள்ளத்தை மறுக்க முடியாது".

பிரேமை என்ற சொல்லின் அர்த்தத்தை அது தரும் உணர்வை எந்த ஒரு சாதாரண மனிதனும் வாழ்வின் எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ வகையில் அனுபவிக்கிறான். ஆனால் கடவுள், பிரம்மம், ஆத்மா என்ற சொற்களின அர்த்தத்தையோ, அவை தரும் உணர்வையோ சரியாக எல்லா ஆத்மசாதகர்களும் கூட உணர்ந்திருப்பார்கள் என்று கூற முடியாது.

தாயின் அன்பை முதலில் காணும் மனித உயிர் பின் தாய் தரும் அன்னையும் சுவைக்கத் தொடங்குகிறது. அந்த எல்லையற்ற கட்டுப்பாடற்ற அன்பு, நாளதோறும் வளர்கிறது. பின்பு தந்தை, குரு, அதிதி என்று அன்பு வட்டம் உருவாகிறது. இந்தப் பூரண வளர்ச்சி தெயவீக அன்பான பிரேமைக்குக் கொண்டுபோகக் கூடியதாகும். அதனால் தான் மாத்ரு தேவோ பவ (தாயைத் தெய்வமாகக் கொள்) பித்ரு (தந்தை) தேவோ பவ; ஆசார்ய (குரு) தேவோ பவ; அதிதி (விருந்தினர் – ஒவ்வொரு ஜீவனும்) தேவோ பவ என்றார்கள். ஆனால் இந்த அன்பின் பூரண வளர்ச்சியை எட்டு முன்பு மனிதனிடம் வளரும் நான், எனது என்ற பொய்மைகள் அவனை தமக்குள் (அந்தப் பொய்மைக்குள்) சிக்க வைத்து விடுகின்றன. மனிதன் தன்னுடைய நாட்டத்தை உலகப் பொருள்களின்மீது திருப்பியபொழுது தெய்வீக அன்பை உணர முடியவில்லை.

ஒரு தொழில் வல்லுனனுக்கும் (மருத்துவர், பொறியியலாளர்) சாதாரண மனிதனுக்கும் உள்ள பிரதானமான வித்தியாசம் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த தொழிலறிவே. கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள பிரதானமான வித்தியாசம் பிரேமையே. ஒரே தொழில் வல்லுனர்களுக்கிடையேயும் அந்தத் தொழிலறிவைப் பிரயோகிக்கும் தன்மையில் வித்தியாசம் காணப்படுகிறது. ஆத்ம சாதகர்களிடையே உள்ள வித்தியாசம் இந்தப் பிரேமாஸ்திரப் பிரயோகமே. பிரம்மா, ஆத்மா கடவுள் எனப்படுவது அன்பின் முழு உருவமே. அது அன்பு மயம். அன்பினில் விளைந்த ஆரமுது. அன்பினாலேயே தான் அந்த அன்பு மயமான இறைவனை உணர முடியும். இறைவன் பிரேமையில் இருக்கிறான். மனிதன் பிரேமையில் இருக்கிறான். இரண்டையும் இணைக்கக்கூடியது அன்பு ஒன்றே. சாயி என்றால் அன்பானது இரண்டு காலில் நடப்பதாகும்.

''கடவுளின் அன்புக்குப் பாத்திரமாக விரும்பினால் பிறரிடம் அன்பு காட்டுவதுதான் ஒரே வழி. யேசுநாதரிடம் உங்கள் போதனையில் முக்கியமானது என்ன?'' என்று கேட்டபொழுது ''இறைவனை உங்களுடைய முழு உடலாலும், ஆத்மாவாலும் சக்தியாலும் வணங்குங்கள் என்றார். அதனிலும் முக்கியமானது 'உன்னைப்போல் அயலவனையும் நேசி' என்றார். அப்படி வாழ்ந்து காட்டினார். தம்மைச் சிலுவையில் அறைந்தபொழுதும் ''இறைவா; இவர்கள் தெரியாமல் செய்கிறார்கள், இவர்களை மன்னியும்'' என்று தெய்வீக அன்பை (Divine love) பிரேமையை தம் வாழ்வில் காட்டினார்.

யாகத்துக்குப் போன நொண்டி ஆட்டைச் சுமந்து சென்று யாக மேடையில் போய் ''இந்த ஆடுகளைப் பலியிட்டுப் பெறும் நன்மையிலும் என்னைப் பலியிடுவதால் கூடிய நன்மை பெற முடியுமாயின் என்னைப் பலியிடுங்கள்'' என்று தமது கழுத்தைக் கொடுத்த ஆசிய ஜோதி புத்த பகவான் தெய்வீக அன்பை வாழ்ந்து காட்டினார்.

அல்லா என்றால் ஆயிரம் தாய்க்குச் சமமானவர் என்பார்கள். அப்படியாயின் நம்மை அன்பினால் நிரப்புவதன் மூலம்தான் இறைவனை, தெய்வீகத்தை எட்ட முடியும். அன்புள்ளவன் அன்புள்ளவனை அறிவான்.

சாயிபக்தர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது ''சாயிராம்'' என்கிறார்கள். அந்தப் பிரேமைக் கொடியின் கீழ் சந்திக்கிறார்கள். இரு நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கள் தங்கள் கொடிகளின் கீழ் சந்திக்கும் பொழுது நாட்டை, அதன் சின்னமான கொடியை, மகிமைப் படுத்துவதாக அவர்கள் கதை இருக்கும். சாயி அன்பர்களின் கதையும் தாங்கள் நாட்டிய, நாட்டுகின்ற பிரேமக் கொடியினை மகிமைப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கவனிக்க வேண்டிய முக்கியம் விடயம் பிரேமையை வளர்ப்பதில் சாயியின் கரம் பிரபஞ்ச (அண்ட சராசர) எல்லைகளுக்கு அப்பால், கால, நேர சரித்திரக் கணிப்புகளுக்கு அப்பால் நீளுகிறது. ஒவ்வொரு துன்பப் பெருமூச்சையும் அவர் இதயம் பதிவு செய்து கொண்டு தான் இருக்கிறது. தாம் கவனிக்க வேண்டிய அளவுக்குத் தகுதியுடையது அல்ல என்று எந்தக் கண்ணீரையும் அவர் அசட்டை செய்வதில்லை. அதனால தான் பரிசுத்த வேதாகமத்தில் ''துன்பப்படுபவர்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் அவர்கள் தேற்றப்படுகிறார்கள்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

இதுதான் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா (''தெய்வீக உண்மைத் தாயும் தந்தையும்) காட்டும் பிரேமயோகம் ஆகும். அவர் வலியுறுத்தும் அன்பில் வாழும் வழியும் இதுவாகும். இறைவனைக் காணும் வழியும் இறைவனாகும் வழியும் இதுவேயாம். ''பேரன்பு பெருகட்டும். பேதமை அகலட்டும்''

இந்தப் பாகம் ஒன்றில் தொகுக்கப்பட்டிருக்கும் பிரேமாசத் துளிகள் இறைவன் விண்ணுலகை மனித இதயங்களுக்குக் கொண்டுவந்து, மனிதன் தனக்குத் தானே விதித்துக் கொண்ட சிறைவாசத்திலிருந்து மீட்ட கதையான, சாயி பாகவதமான சத்தியம் சிவம் சுந்தரம் என்ற நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்.

இந்தத் தொகுப்பின் அமைப்பு, சிறப்பு எதற்கும் இந்தப் புல்லாங்குழல் உரிமை கொண்டாட முடியாது. மீட்டியது அவன்; கேட்டது அவன் குரல்; உரிமை கொண்டாட ஒன்றும் இல்லாத புல்லாங்குழலுக்கு என்ன தகுதி இருக்கிறது? ஒன்றும் இல்லாமல் இருந்ததுதான், இருப்பதுதான் தகுதி. சம்பிரதாய பூர்வமாகத் தானும் சொல்லும்...... நன்றி ''சாயிராம்'' என்று இருக்கட்டும். நாங்கள் சாயியின் குழந்தைகள் என்ற பாக்கியம் பெற்றவர்கள்.

ஜெய் சாயி ராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமஸ்வருபனின் பிரேமையிலிருந்து ......... 1

வேதங்களில் கூறப்பட்டுள்ள பிரபஞ்சப் பிரேமையின் பராமரிப்போடு கூடிய பாதுகாப்பின்கீழ் உலக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்க முடிவுசெய்திருக்கிறேன். ஏனெனில் இந்த உலகம் என் அரண்மனை. ஒவ்வொரு கண்டமும் அந்த அரண்மனையில் ஒரு கூடம். பொய்மை தோல்வியுறும், உண்மை வெல்லும். ஒழுக்கம் அரசோச்சும். அதிகாரத்தை அளிப்பது நன்னடத்தையே தவிர, அறிவு, கற்பனைத் திறன், செல்வம், ஆகியவைகளல்ல என்று மனித வரலாற்றின் ஏட்டில், பொன்னெழுத்தால் புதிய அத்தியாயத்தில் எழுத வந்திருக்கிறேன். உலக நாடுகளின் ஆலோசனைச் சபையில் ஞானம் அரசு கட்டில் ஏறும். அதனால் வழி தவறிச் செல்லாதீர்கள்.

அற்புத சக்திகளைக் காட்டி மக்களை வாயடைத்து நிற்கச் செய்வது என் நோக்கமல்ல. உண்மையான ஆத்மீக முயற்சிக்குப் பரிசாக மங்கலத்தையும், பேரின்பத்தையும் அளிக்கும் ஆசிகளை அருளுவதும், மக்கள் குலத்தை மீட்சி, ஒளி, பிரேமை ஆகியவைகளை நோக்கி இட்டுச் செல்வதும் தான் என் நோக்கம். (ப. 30 ச. சி. சு. பா. 3.)

(i) மகிழ்ச்சியாகவும் உற்சாகத்தோடும் இரு.

(ii) இறைவனிடம் நீ கொண்ட நம்பிக்கையை வளர்த்துக்கொள்.

(iii) நன் மக்களின் கூட்டுறவை நாடு.

(iv) ஒழுக்கத்தை வளர்த்துக்கொள்.

(v) உன்னதமான கொள்கைகளை ஆதரி.

(vi) புலன்களைக் கட்டுப்படுத்து.

(vii) தீயவைகளைக் காண்பது, தீயவைகளைக் கேட்பது, தீய நினைவுகளை விரும்புவது, தீய காட்சிகளை, தீய கொள்கைகளை, தீய செய்திகளை விரும்புவது ஆகியவைகளை விலக்கு.

(viii) நேர்மையான வழிகளில் நடக்கவேண்டுமே தவிர, கோணல் வழிகளில் செல்லக்கூடாது.

(ix) கழிவுப் பொருள்கள் போன்றவைகளைப் படிக்கக்கூடாது.

(x) இழிந்த திரைப்படங்களைப் பார்க்கக் கூடாது.

(xi) பஜனை, நாமஸ்மரணை, நகர சங்கீர்த்தனம் மூலமாக மனதைக் கட்டுப்படுத்து. (ப. 28 — பாகம் 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாண்டுப் போர், முப்பதாண்டுப்போர், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் போர், ஜீவனுக்கும் மாயைக்கும் இடையில் போர், தனி மனிதனுக்கும் பொருளியல் உலகுக்கும் போர் என நாம் கேள்விப்பட்ட இந்தப் போராட்டங்கள் கால ஓட்டத்தைத் தொடர்ந்து வருகின்றன. ஆதிகால மனிதன் அவைகளோடு சிக்குண்டிருந்தான். உலகத்தின் கடைசி மனிதன்கூடப் போராடியே தீரவேண்டும்.

அர்ச்சுனனைப் போல இறைவனை உன் சாரதியாக ஏற்றுக்கொண்டு அவரிடம் புலன்கள், மனம், புத்தி, ஆசை ஆகிய அனைத்தையும் ஒப்படைக்காவிடில் இந்தப் போர் ஓயாது.

வெற்றியைத் தராது.

ஆன்மீகக் கல்வி உனக்கு இந்தப் பாடத்தைத் தான் கற்பிக்கிறது. மனிதக் குழந்தைகள் இந்தப் பாடத்தை அறிந்து கொள்ளும் உரிமை பெற்றவர்கள். (ப. 81 - பாகம் 3)

என்னை உன்னுடைய சாரதியாக்கிக்கொள். இந்த ஒப்புயர்வற்ற, நல்வாய்ப்பினை நழுவ விடாதே. உனக்கு மீட்சியளிக்கக் கூடிய சாதகம் (சாதனை- ஆத்மீகப் பயிற்சி) எது என்று என்னிடம் கேள். காலம் கடந்தால் என்னை நெருங்க உன்னால் முடியாமற் போய் விடும். உலகின் நான்கு திசைகளிலும் இருந்து வெள்ளப் பெருக்கைப் போன்று மக்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தெய்வீக தத்துவம் விசுவ விருட்சமாக (உலக முழுவதற்கும், மனித குலம் முழுவதற்கும் நிழலும் இடமும் நல்கும் மரம்) வளர்ந்து பெருகி வருகிறது. இந்த உருவத்தை ஏற்று வந்ததும் இந்தக் காரணத்திற்காகவேதான். இந்த அவதாரத்திற்குத் தயக்கமோ தடங்கலோ இல்லை;

என் பெயர் சத்தியம்.
என் போதனைகள் சத்தியம்.
என் பாதை சத்தியம்.
நானே சத்தியம்.

(ப. 84 - பாகம் 3)

அன்பின் மிகுதியால், நீங்கள் நலமடைய வேண்டும் என்று நான் உங்களுக்கு அளிக்கும் அறிவுரைகளைச் சிந்தித்துப் பாருங்கள். செய்த, சிந்தித்த தவறுகளுக்காக கழுவாய் தேடுவதன் மூலமாக, உள்ளத்தைத் தூய்மைப் படுத்துங்கள். அசைக்க முடியாத உறுதியோடு உங்கள் வாழ்க்கையை மாற்றி யமைத்துக் கொள்ளுங்கள். தீமை நிறைந்த பழக்க வழக்கங்கள், சொற்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லகளை நெறியுங்கள். இறைவனின் திட்டங்களுக்கு ஒத்தாற் போல் வாழ்க்கையை நடத்துங்கள். அதன் மூலமாக உங்கள் ஒவ்வொருவருள்ளும் தெய்வீகம் மலரும். (ப. 109 - பா 3)

நான் உங்களுக்கு அளிக்கும் செய்தி இதுதான். பிரேமையே உருவானவர்களாக நீங்கள் திகழ வேண்டும். யாரையும் வெறுக்காதீர்கள். யாரைக் கண்டும் பயப்படவும் கூடாது (உண்மை உங்களைப் பயமற்றவர்களாக்கும். இருப்பது ஒன்றே ஒன்றுதான். பின் பயம் தோன்றுவானேன்? — ப 122 - பா 3)

எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்கள் மகிழும் போது நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். மற்றவர்கள் துயருறும் போது அதனைக் கண்டு பூரிப்படையக் கூடாது.

(ப. 116 - பா 37)

ஒவ்வொருவரும் அன்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிரபஞ்சத்தை இயக்குவது பிரேமையே. பிரேமையே இறைவன். இறைவனின் அருளைப் பெற்றுத் தருவதும் அவரோடு ஐக்கியமடையச் செய்வதும் பிரேமையே. (ப. 132 - பாகம் 3)

தனக்கு இடப்பட்ட வேலையை தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் திறமையையும், புத்திக் கூர்மையையும் உபயோகித்து, சிறப்பாக ஆற்றி பொது நன்மைக்கு அதனைப் பயன்படுத்துவதே வாழ்க்கையை சிறப்புடையதாக மாற்றும் முயற்சியாகும். மனித உடலிலிருந்து உலகில் பிறந்த ஒவ்வொருவரும் உண்பதற்காகவும், பருகுவதற்காகவும் மட்டுமே பிறக்கவில்லை. உண்பதும் பருகுவதும் உயிர்வாழும் பொருட்டேயாம்.

நாம் மேற்கொள்ள வேண்டிய சிறப்பான பணி வேறு ஒன்று உண்டு. அதுதான் அன்பின் வழியில் இறைவனின் சந்நிதியை அடைதல். உடலெனும் தொழிற்சாலையில் நுழைந்து ஏற்றுக் கொண்டிருக்கும் உயர்ந்த பணி அதுவே.

இந்த முயற்சியில் நமது முழுத் திறமையையும், முழுச்சக்தியையும் செலவிட வேண்டும். இல்லையேல் மனோவிகாரங்களின் குழப்பம் எனப்படும் இருளில் நமது பெறற்கரிய பிறவியை வீணாக்கியவர்களாவோம். (ப. 416 - பாகம் 3)

பிரேமையே சக்தி, பிரேமையே பேரின்பம்,
பிரேமையே ஒளி, பிரேமையே கடவுள். (ப. 48, பா 3.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஸ்தூரி அவர்களின் வார்த்தைகளிலிருந்து........ 2

அன்பையும் ஒளியையும் தேடுபவர்கள் பாக்கியம் செய்தவர்கள். அவர்கள் சத் சித் ஆனந்த சொரூபமான பாபாவைக் காணும் பாக்கியத்தையும், அவருடைய தெய்வீகத்தைக் காணும் பாக்கியத்தையும் பெறுகிறார்கள். அவருடைய உலகப் (பிரபஞ்சப்) பேரன்பு நிறைந்த உபதேசங்களையும் தூய சத்தியத்தையும் தேடத் தூண்டும் உபதேசங்களையும் கேட்கும் பாக்கியத்தையும் அவர்கள் பெறுகிறார்கள். அவருடைய அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு அதன்வழி நடப்பவர்கள் இன்னும் சற்று அதிகமாக பாக்கியம் செய்தவர்கள். ஏனெனில் அவர்கள் அந்த அறிவுரைகளைக் கையாள்வதன் மூலமாக படைப்பு முழுவதிலும் வியாபித்திருக்கும் அந்தத் தெய்வீகத்தின் நினைவில் எப்பொழுதும் ஒன்றி விடுகிறார்கள். அவருடைய அவதாரத்தைத் தமக்கு அருஞ் செயல் ஆற்றுவதற்குக் கிட்டிய அரிய வாய்ப்பாகக் கருதுகிறார்கள். (ப 214 - பாகம் 3)

அவர் அன்புருவாக இருப்பதால்தான் தன்னலமின்றி அனைவரிடமும் அன்பு செலுத்துமாறு அவர் நமக்குப் போதிக்கிறார். அன்பின் மூலமாக நாம் ஒவ்வொருவரும் ஆண்டவனாகவே மாறமுடியும் என்று பறைசாற்றுகிறார்.

எனக்கு ஏதாவது பெயரிட வேண்டுமென்று விரும்பினால் என்னைப் பிரேமஸ்வரூபன் என்று கூப்பிடுங்கள் என்கிறார். (ப. 311 - பாகம் 3)

தூய அன்பின் மூலமாக சுயநலம் நிறைந்தவர்களான நம்மைப் பிறர் நலம் நாடுபவர்களாகவும் குறுகிய உள்ளங்களைப் பரந்த உள்ளங்களாகவும் மாற்றுகிறார். (ப. 311 - பாகம் 3)

* * *

ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய முன்னேற்றத்தின் பொருட்டு, பிறர் தூண்டுதலின்றி முன்வந்து மற்றவர்களுடன் ஒத்துழைத்து, தனி மனிதன் என்ற கூற்றை உடைத்துக்கொண்டு, ஆன்மீக ஐக்கியம் என்னும் இலட்சியத்தை அடைய வேண்டும். இதுவே தனி மனிதன் பரம் பொருளோடு இணைந்து விடுவதற்காக பாபா வகுத்துக்கொடுத்த செயல்முறைத் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னையொத்த மனிதர்களோடும் சமுதாயத்தோடும் ஒன்றுசேராமல் தனித்திருந்து சாதகம் செய்பவனை — கடைநிலை சாதகனாகக் கருதுகிறார் பாபா.

ஒரு ஒற்றை நீர்த்துளி விரைவில் ஆவியாகி மறைந்து விடுகிறது. ஆதவனின் ஒளிக்கதிர்களால், கடலிலிருந்து பிரிக்கப்பட்ட நீர்த்துளி, தன் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் கூடி, கால்வாய்களாக மாறி வெள்ளப்பெருக்கோடு ஒன்று சேர்ந்தாலொழிய மறுபடியும் அதனால் கடலோடு கலக்க முடியாது.

சமுதாயத்தை கன்னம் இடப்படுவதாகவோ, சூழ்ச்சியாகவோ, மயக்கும் யந்திரமாகவோ எண்ணவேண்டாம். தன்னையொத்த உயிரினங்களுக்குச் சேவை செய்வதையே சிறந்த சாதகம் என்று அன்பு யோகம் வற்புறுத்துகிறது (ப. 355 – பாகம் 3)

அவருடைய அன்பெனும் நீரோடை வரண்ட இதயங்களில் பாய்ந்து நம்பிக்கை, உறுதி, தியாகம், என்னும் உரங்களையிட்டு பேரானந்த அனுபவத்தையடைய உதவுகிறது. (ப. 317 – பாகம் 3)

தம் பக்தர்களிடம் பாபா கொண்டுள்ள பிரேமை பல வழிகளில் வெளிப்படுகிறது. தர்மக்ஷேத்திரத்தில், சத்ய தீபத்தில், பாலவிகாஸ் ஆசிரியர்களின் கூட்டம் நடந்தது. கூட்டம் தொடங்கிய பிறகு, குன்றுக்குக் கீழே கூடியிருந்த பஜனைக் குழுவை மேலே வந்து கலந்து கொள்ளும்படி அழைத்தனர். விரைவு மிகக்கொண்டு, குன்றின்மேல் ஏறிவந்ததால் அநேகம் பேர்களுக்கு மூச்சு வாங்கியது. அவர்களுக்குள் வயதான பாட்டி ஒருவர் மிகவும் சிரமப்பட்டார். பாபா அந்த அம்மையாரை மின் விசிறிக்குக்கீழே அமரச் செய்து சுவரில் சாய்ந்து கொள்ளும்படிக் கூறிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்.

ஒரு சில வினாடிகளுக்குப் பிறகு அங்கே திரும்பி வந்த பாபாவின் கரத்தில் ஒரு குவளையில் நீர் இருந்தது. அதனை அந்த மூதாட்டியிடம் கொடுத்துக் குடிக்கும்படி செய்து களைப்பைப் போக்கினார்.

இதுதான் இறைவனை அடைவதற்கான வழி. இதனை அன்பு வழி என்றும் கூறுவர்.

ஓ! அருச்சுனா, எல்லா உயிரினங்களின் இதயங்களிலும் வீற்றிருப்பவன் நானே. அதனால் என்னிடத்தில் மனதை நிலைக்கச் செய்தவனாய், என்னிடம் பக்தி செய்து, எல்லாவற்றையும் எனக்கே அர்ப்பணித்து என்னை வணங்கி வருவாயானால் நீ என்னை வந்தடையலாம் என்று கீதையில் பகவான் கூறுகிறார். (ப. 401 – பா. 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு மு பட் வார்த்தைகளிலிருந்து 3

பாபாவின் அற்புதங்களைப் பார்த்து அதில் மனத்தைப் பறி கொடுத்து, ஒன்றை மறந்து விடக்கூடாது. அதாவது அவருடைய பிரேமையை நாம் மறந்து விடக் கூடாது அற்புதங்கள் அனைத்திலும் மிகவும் உயர்ந்த அற்புதம் அந்தப் பிரேமை தான்.

முழுமுதற் பொருள் தனி மனிதனாக நடமாடிக் கொண்டிருக்கிறது. அதைத் தொட்டுப் பார்க்கலாம், நெருங்கிப் பேசலாம், உன்னை நோக்கி அது ஆனந்தமாக முறுவலிக்கிறது. ஒவ்வொரு பக்தனும் பாபா தன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறார் என்று எண்ணுகிறான். விஸ்தாரமான அவருடைய பிரேமையே அதற்கு காரணம். அந்தப் பவித்திரமான அன்பு, விஸ்வப் பிரேமையாக (பிரபஞ்சப் பிரேமை) இருந்தாலும், வியக்தி பாவத்தோடும் (தனி மனிதத் தன்மையோடும்) தோன்றுவதே அப்படி ஒவ்வொருவரும் எண்ணுவதற்குக் காரணம். இதுவே அற்புதங்களிலெல்லாம் சிறந்த அற்புதம். மற்ற மகிமைகள் எல்லாம் இந்தப் பிரேமையின் விளைபொருள்கள் தான்.

இந்தப் பிரேமை ஊற்றின் முடிவான பயன் என்ன தெரியுமா? ஆத்ம சாட்சாத்காரத்தை எல்லா ஜீவராசிகளுள்ளும் வாழும் ஏகமான ஆத்மாவை, இந்த உலக வாழ்க்கைக்கெல்லாம் தலைவனை (இறைவனை) அறிந்து கொள்ள உதவுவது தான்.

இந்த அற்புதமான, தன்னலமற்ற, பவித்திரமான அன்பு வெள்ளம், ஒரு சிலரின் வழியாகத்தான். சுழித்தோடுகிறது. அவர்கள் மிகச் சிலரே அந்த அற்புதமான பிரேமைப் பிரவாகம் பொங்கிப் பெருகுகிறது என்பதை அறிந்து கொண்டும். அது பெருகும் காலத்திலேயே வாழ்ந்து கொண்டும் இருக்கும் நாம்தான் எவ்வளவு பாக்கிய சாலிகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குருஸாயி ஞான சேகரம் ஐயா அவர்களின் வார்த்தைகளில் 4

"ஒவ்வொருவரிடமும் சென்று, ஒவ்வொரு மனிதனிடமும் தூங்கிக் கிடக்கும் தெய்வீக உணர்வைத்தட்டி எழுப்புவதற்காக முழுமையான தெய்வீக சக்தி சத்திய சாயியாக மனித சமுதாயத்துக்கு நடுவே வந்திருக்கிறது. உன்னைச் சுமந்து செல்லவும், உன் கூட வரவும், உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன். உன்னை என்னால் கைவிட முடியாது. எனது குழந்தைகளுக்கு நான் செய்ய வேண்டிய கடமையில் தவற மாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்." என்கிறார் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

இப்படியும் ஒரு அன்னை, இப்படி ஒரு துணையை, இப்படி ஒரு உறுதியை, இப்படி ஒரு தயாளரை உலகம் என்றும் கண்டதுண்டா? நல்லவர் தீயவர் என்று கூடப் பாகுபடுத்தாமல் எல்லோரையும் மீட்க வந்து பிரபஞ்சம் என்ற சேற்றில் அமிழ்ந்து போன நம்மை மீட்கக் கை நீட்டுகிறதே. இதையும் எவரும் வேண்டாமென்பாரா? திக்கற்றுத் தவிக்கும் மக்களுக்குக் கற்பக விருட்சம் போல் வந்து நம்முன் நிற்கிறதே. இதை அறியாத அறிவும் அறிவா? காணாத கண்ணும் கண்ணா? பந்தத்தில் நின்று மீள வழியறியாமல் கிடப்பவருக்கு ஆயிரக் கணக்கான வருடங்கள் காணாத விமோசனத்தை ஏற்றுக் கொள்ளாதிருப்பது நமது பாபமா?.

இந்தச் சாயி எதை நமக்குத் தர இருக்கிறது? "ஸ்வாமியிடம் (என்னிடம்) உள்ள ஐஸ்வரியம் எவரிடமுமில்லை. அது என்னவெனில் நிலையான, தூய்மையான, மாசுமறுவற்ற பிரேமை ஒன்றே. இதுவே சாயியின் பெருமதிப்புள்ள நிதி. இது மட்டுமிருந்தால் பிரபஞ்சமே நமக்கு அடி பணியும்" என்கிறார் அவர்.

இந்தச் சாயி அவதாரம், தன் ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் உலகெங்கும் தெய்வீகத்தைப் பரப்பி வருகிறது. மக்கள் உள்ளங்களிலே நல்ல தன்மையை மலரச் செய்கிறது. "சாயி தத்துவமே பிரேமை தத்துவம் தான், எவ்வளவு தூரம், பிறர் உங்களை நிந்தனை செய்து, உங்களுக்குக் கோபம் வருமாறு இகழ்ந்து பேசினாலும், நீங்கள் சிறிதும் பாதிக்கப்படாமல் எப்பொழுதும் புன்முறுவலுடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டும். போலியான சிரிப்பை வரவழைத்துக் கொள்வதை நான் குறிப்பிடவில்லை''.

''உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து இந்த நேச உணர்வை எழுப்பி உண்மையாகவே மகிழ்ச்சியைப் புலப்படுத்துவதாக இருக்க வேண்டும். உங்கள் புன்னகை இதயம் பரிசுத்தமாக இருந்தால்தான் இப்படிப்பட்ட இயல்பான மகிழ்ச்சி எப்பொழுதும் நிறைந்து இருக்கும்' என்கிறார் பாபா.

அவர் சொல்வதைக் கேட்காமல் அவருடைய பிரேமையை எப்படி அறிய முடியும்? மக்களைப்பற்றி அவர் சொல்லும் உண்மையையும் அதை அடையும் மார்க்கத்தையும் அறியாமையை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் எங்ஙனம் அறிய முடியும்? அவரை அடைந்தவர்களாகப் பலர் எண்ணிக் கொண்டும் அவர் அளிக்கும் பேருபகாரத்தைப் பெறாது வாழ்வது, அவருடைய கருத்துக்களைக் கேட்க இயலாத துர்பாக்கியமே. வேதங்களும் சாஸ்திரங்களும் கடவுளை எட்டக்கூடிய அளவு விவரித்தாலும் அதை மக்கள் எட்டாத பொருளாகவே எண்ணி வந்தனர். ஆனால் இந்தத் தெய்வஸ்வரூபம் தான் தெய்வம் என்று பிரகடனம் செய்து தன்னை நாடிய பக்தர்களுக்கு ஐயந்திரிபற தன் தன்மையைப் புரிய வைப்பதோடு, அவர்கள் வாழ்க்கையின் போக்கையே மாற்றி உயர்த்தி விடுகிறது.

நாம் சாஸ்திரங்கள் மூலமும் சம்பிரதாய முறைப் படியும் அறிந்தவற்றில் உள்ள குறைபாடுகளை, நோகாமல் வெளிப்படுத்தி சரியான வழிமுறைகளைத் தந்து வருகிறது. இந்தச் சாயி அவதாரம். (இந்த நூலில் தொகுக்கப்பட்டவை முழுமையும் அவையே)

பிடிவாதமான கொள்கைகள் வைத்திருப்பவர்கள் இவற்றைக் கண்டு இளகுவார்களோ என்னவோ? ஆனால் உண்மை உள்ளவர்கள் எவரோ அவர்களுக்கு இந்த நூலில் உள்ள தொகுப்பு தேவாமிர்தம் அவர்களின் ஞானக் கண்ணைத் திறக்கும். அவர்கள் வாழ்வு ஒளிமயமானதாயும், நாள் வீதம் தெய்வீகம் வளர்வதாகவும் இருக்கும் என்பது சத்யம்.

சில முத்துக்கள் புத்தகத்தில் அவர் அளித்த முன்னுரையிலிருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் 5

நான் என்பது கொலு இருக்கும் ஆலயம், இந்த உடல். நாம் எனப் படும் ஒருமித்த எண்ணங்களில் ஆலயம் இந்த நாடு.

நான், நாம் என்பதன் கூட்டுத் தொகையான அவர் எனப்படு-வரின் ஆலயம் இந்த உலகம். இந்தக் கூட்டத்தில் எல்லா விதமான மதக் கொள்கைகளையும் பின்பற்றுபவர்கள் இருக்கிறார்கள்.

காணமுடிவதும் காட்சிக்கரியதுவுமாக உள்ள சத்தியத்தினைக் கண்டு கொள்ளும் செயல் முறையின் ஒரு பகுதியாக, மன உணர்வு களையும் எழுச்சிகளையும் தூய்மைப் படுத்தும் முயற்சியே மதமாகும்.

முயற்சிகள் பல வாயினும் பெற விரும்பும் நிதி ஒன்று தான். வழி கள் பல வாயினும் சேருமிடமும் ஒன்று தான். ஆனால் கௌரவம், பொருள் ஆகியவற்றுக்காகப் போட்டியிடும், கூக்குரல் எழுப்பும் வழி காட்டிகள் பலர் இருக்கிறார்கள். விண்வெளி முழுவதும் தேடியும் இறைவனின் சாயலைக் கூடக் காணமுடியவில்லை என்று உரத்த குரலில் அறிவிப்பவர்களும், கடவுள் இறந்து விட்டார் என்று துணிந்து கூறுபவர்களும் கூட இருக்கிறார்கள். அப்படியே கடவுள் உயிரோடு இருந்தாலும் அவர் மனிதனுக்குப் பயன்படாதவராகி விட்டார் என்றும் இடைஞ்சலான பொருளாகவும், மிகவும் விலையுயர்ந்த பொரு ளாகவும் ஆகிவிட்டார் என்று கூறுபவர்களும், கடவுள் என்பது மனி தனின் அறிவுக் கெட்டாத காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்று கூறுபவர்களும் உள்ளனர்.

பிரபஞ்ச முழுவதிலும் நிறைந்து நிற்பதும் அன்பு, சேவை, தியாகம் ஆகியவைகளின் மூலமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதுமான அந்த ஏதோ ஒன்று தான் கடவுள். (ப - 12. பாகம் 3)

II

உன்னுள் இருப்பவரும் கிருஷ்ணரே. அவர் சர்வபூத அந்த ராத்மா. எல்லா உயிரினங்களுக்குள்ளும் உறைபவர் அவரே. அவர் உன்னுள் இல்லை என்றால், நீ உயிர் வாழ்வது எப்படி? அவர் உன்னுள சக்தி, வலிமை, பிரேமை, ஆனந்தம் உற்சாகம், இரக்கம் ஆகியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக இருக்கிறார். அவைகள் பற்றிய கதைகளை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து அவைகள் உணர்த்தும் உட்பொருளை அறிய முயல வேண்டும்.

பிருந்தாவனம் என்பது வாழ்க்கை என்னும் இருண்ட வனம். தனி மனிதன் அவர் பேணி வந்த கோ அல்லது பசு. கோகுலம் என்பது பசுக் களின் மந்தை அல்லது ஜீவாத்மாக்களின் தொகுதி. நல்லெண்ணங்களும், சீரிய உணர்வுகளும் நிறைந்த இதயத்தைக் கடைந்து பெறும் தூய்மை யாகிய வெண்ணெய்க்கு ஆசைப்படுவதும், ஒவ்வொரு உயிரிலும் உள் நின்று ஒளிர்வதுமான தெய்வத்துவமே கிருஷ்ணன்.

அவர் வழி காட்டுகிறார், தூண்டுகிறார். ஆசீர்வதிக்கிறார், அருளைப் பொழிகிறார். (ப 273 – பாகம் 3)

III

அன்பின் உருவமே கிருஷ்ணன், கிருஷ்ணன் என்றால் உள்ளத்தை மயக்கித் தன்பால் இழுப்பவன் என்பது பொருள். கிருஷ்ணனை வழி படுவோர் இத்தகைய அன்பில் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கிருஷ்ணன் என்ற சொல், ''உழுது வித்திட்டு வளர்'' என்றும் பொருள்படும். ஆதலால் கிருஷ்ணனை வழிபடும் ஒவ்வொருவரும் தங் களது உள்ளமாகிய நிலத்தை உழுது, காமம் என்னும் களையைக் களைந்து, அன்பெனும் வித்திட்டுத் தோன்றிய செடியை விழிப்புடன் இன்பம் என்னும் கனியை ஈயவல்ல தொண்டு என்னும் மலர்க் கொத் தினைப் பெறும் வரை காக்க வேண்டும். (பக்கம் 25 பாகம் 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வமத சமரசம் 6

என்னுடைய பல்வேறு நாம ரூபங்களை ஆராதிப்பவர்களை அதிலிருந்து பிரித்து இந்த உருவத்தை நோக்கி இழுத்துக் கொள்ளுவதை நான் விரும்பவில்லை. நீங்கள் அற்புதங்கள் எனக் கூறும் செயல்கள் மூலம் நான் உங்களைக் கவர்ந்து என்னோடு, என்னிடம் மட்டுமே பக்தி பூண்டவர்களாக மாற்ற முயலுகிறேன் என்று தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்.

விளம்பர நோக்கத்துடனோ, என் சக்தியை நிரூபிக்கும் நோக்கத்துடனோ அவைகள் ஆற்றப்படவில்லை. விண்ணை மண்ணாக்கவும், மண்ணை விண்ணாக்கவும் சக்தி படைத்த தெய்வத்தின் சக்திக்கு அவைகள் இயல்பான உறுதியான சான்றுகள்.

நீங்கள் என்னை ஏற்றுக் கொண்டாலும், மறுத்தாலும் நான் உங்களுடையவனே. நீங்கள் என்னை வெறுத்தாலும் விலக்கித் தள்ளினாலும் நீங்கள் என்னுடையவர்களே. அப்படி இருக்கும் போது உங்கள் வணக்கத்தைப் பெறுவதற்கு என் பிரேமையை, என் அருளை வெளிப்படுத்தி உங்கள் மனதில் பதிய வைத்துக் கவர வேண்டிய அவசியம் என்ன? நான் உங்களுக்குள்ளே இருப்பவன், நீங்கள் எனக்குள்ளே இருக்கிறீர்கள். உங்களுக்கும் எனக்கும் இடையே இடைவெளியோ வித்தியாசமோ இல்லை.

பிரசாந்தி நிலையம் உங்கள் வீடு. நீங்கள் உங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் இதயங்கள்தான் என் வீடு. *(ப. 217 பா 3)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி சேவா குழுக்களில்.... 7

இந்த அமைப்புகள் அன்பை விசாலமாக்கவும் உன் செயல்களை பக்தி பூர்வமான சேவை மூலமாக வெளிப்படுத்தவும் உதவுவதற்காக ஏற்பட்டதாகும். பக்தியைப் பறை சாற்றவும் பக்தர்களைத் திரட்டவும், ஒரு புதிய மார்க்கத்திற்கு உதவி திரட்டவும் ஏற்படுத்தப்பட்டதல்ல.

தமது உண்மைத் தன்மையை உணர்ந்து கொண்டு அதனோடு ஒன்றறக் கலந்து விட மக்களுக்கு உதவும் சிறப்பு மிக்க செயலுக்கு சமர்ப்பணமாக இந்தக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
(ப – 72 பா – 3)

II

நீங்கள் உங்கள் இலக்கைப் பற்றி ஐயம் கொள்ள வேண்டியதில்லை. தெய்வீகமான ஞானம், சக்தி, பிரேமையில் நீங்கள் ஒன்று கலந்து விடுவீர்கள். இது உறுதி. தடுமாற்றம் கொள்ள வேண்டாம். பின் தங்கி விடாமல் தன்னம்பிக்கை உடையவர்களாக, துணிவு உடையவர்களாக, சுதந்திரமானவர்களாக இருக்க முயலுங்கள், தெய்வீகத்தின் செயல் திட்டத்தில், இறைவனின் கைக் கருவிகளாக நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். பலவீனத்திற்கோ, தடுமாற்றத்திற்கோ இடம் தராமல், பக்தி, பணிவு, ஆகியவைகளில் நீங்கள் அனைவரும் முன் மாதிரியாகத் திகழ வேண்டும். அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ளாமல் உபதேசிக்க விழையக் கூடாது. அனைவரிடமும் அன்பு காட்டுங்கள். ஒற்றுமையாகப் பணி புரியுங்கள். ஆன்மீக பயிற்சிக்கான அழைப்பே உன் பதவிப் பொறுப்பு. என் நேரடிப் பார்வையில் என் நிர்வாகத்தின் கீழே நீ இருக்கிறாய் என்பதற்கான எச்சரிக்கையே உன் பதவி.
(ப 269 – பா 3.)

III

என் இருப்பிடம் உங்களுக்குள்ளே இருக்கிறது. உங்களோடு, நீங்கள் எங்கெங்கே பணிபுரிகிறீர்களோ அங்கே நான் இருப்பேன். நான் மேடையில் போடப்பட்ட தனியாசனத்தில் உங்களிடமிருந்து பிரிந்து தனித்து இருப்பவனல்ல. நான் உங்களில் ஒரு பாகமாக, தோழனாக, பங்கு கொள்பவனாக, உங்களைத் தூண்டி அறிவுரை பகன்று ஊக்குவித்து உற்சாகப்படுத்துபவனாக இருக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பெருமையை விட்டு விடுங்கள். அத்யாத்மிக கர்வம் கொடிய நஞ்சாகும், அது வஞ்சகத்தின் உச்சநிலை.

ஆன்மீக பயம் கூட நச்சுத்தன்மை வாய்ந்ததே. 'நாளிருக்கப் பய மேன்' என்று கூறுபவரை உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட பின் பயம் எதற்கு? அது இதயத்திலிருப்பதை உன் உதடுகள் உறுதிப்படுத்தத் தவறியதாகும். சஞ்சலம் நிறைந்த மனம் கொடிய தண்டனைக்குச் சமம்.

இதயத்தில் நேர்மை இருந்தால், நடத்தையில் ஒரு அழகு இருக்கும்.

நடத்தையில் அழகு இருந்தால் குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் ஒற்றுமை உண்டானால் நாட்டில் ஒழுங்கு ஏற்படும். நாட்டில் ஒழுங்கு ஏற்பட்டால் உலகத்தில் அமைதி நிலவும்.

அதனால் பேச்சு, நினைவு, சமுதாய வேறுபாடுகள், பாண்டித்யம்' செல்வம் போன்றவைகளின் அடிப்படையில் தோன்றும் பகைமைகளை வளரவிடக் கூடாது. (ப - 273 பா 3)

IV

சாயி சேவா குழுக்கள் பல விதங்களிலும் ஒப்பற்ற தன்மைகளையுடையன. இவைகள் நன்கொடைகள் வசூலிப்பதில்லை. ஆதரவாளர்களைத் தேடுவதில்லை. குழுக்கள் அனைத்தும் ஒரே தலைவரின் கீழ், எங்கும் நிறைந்த, எப்பொழுதும் பிரசன்னமாயிருக்கும் பகவான் தலைமையின் கீழ் பணி புரிகின்றன. பகவானின் அருளைப் பெற சேவையை வழிபாடாகவே எண்ணித் தொண்டாற்றும் மக்களைக் கொண்ட கூட்டத்திற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

இவைகளில் பகைமையோ, போட்டிகளோ, பொறாமையோ, தற்பெருமை என்னும் நோயோ தோன்றி வருத்துவதில்லை.

இவைகள் சாதகர்களின் அமைப்புகள். உன் கடமையிலும், பொறுப்பிலும், மிகுந்த கவனம் செலுத்து. சாதிப்பற்று, தனிப்பட்ட விரோத அரசியல் சார்பு ஆகியவைகளைக் கொண்டு உன்னை நீயே கறைப்படுத்திக் கொள்ளாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ எங்கிருந்த போதிலும் சரி, உன்னை உள்ளும் புறமும் ஊடுருவிப் பார்க்கும் சக்தி படைத்தவன் நான் என்பதை மறவாதே. தலையை உயர்த்திக் கொண்டு நடப்பதும், பிறரை நிந்திப்பதும் விரும்பத்தகாத செயல்கள். குனிந்து இழ்ப்படிந்து நடப்பதனால் தான் சுமையைத் தோள்களில் ஏற்றிக் கொள்ள முடியும். பார்ப்பவர்களுக்கு உதாரணமாகவும் உற்சாக மூட்டுபவனாகவும் நடந்து கொண்டு சிறந்த முறையில் தொண்டு செய். பெரியவர்களைப் பின்பற்றி நட. அப்பொழுது தான் சாதகர்களை இறைவனின் இதயம் வரை இட்டுச் செல்ல உன்னால் முடியும்.

அனைவரிடமும் பணிவும் உள்ளன்பும் கொண்டவனாக இரு. உன் பக்தியை விளம்பரப்படுத்தாதே. சாயி சின்னத்தை உன் சட்டையில் அணிந்து கொள்ளுவதோடு உன் பணி முடிந்து விடுவதில்லை.

இது மறை முகமான ஆதாயம் பெறுவதற்குரிய வரம்.

(ப 267 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அளப்பதற்கு முனையவேண்டாம். உன்னையே நீ அளந்து பார்க்க முயற்சி செய். அப்படிச் செய்தால் என்னையும் அளக்கலாம். நான் தவமியற்ற வேண்டாம். நான் தியானிக்க வேண்டாம். நான் கற்க வேண்டாம். நான் சாதகர்களுக்கும் சாதுக்களுக்கும் வழிகாட்டி. அவர்களுக்கு அருளுவதற்கே வந்திருக்கிறேன். நான் அனைத்துமாவேன். என்னை ஸ்துதி செய்ய வேண்டாம். நீ உனது தந்தையை முகஸ்துதி செய்தா உனக்கு வேண்டுவனவற்றைக் கேட்கிறாய்? உரிமை கொண்டாடியே கேட்கிறாய் அல்லவா? அங்ஙனமே என்னிடத்திலும் தைரியமாகக் கேள்.

நான் இவ்வுலகத்திற்கு அழைக்கப்படாமல் வந்தேனில்லை. எல்லா நாட்டையும் மதத்தையும் சேர்ந்த முனிவர்களும், துறவிகளும், நல்லோர்களும் என் வரவை வேண்டினர். ஆசையால்தான் நான் வந்தேன். நீங்கள் என்னை முதல் முறையே பார்ப்பவராக இருக்கலாம். உங்கள் யாவரையும் அன்றும், இன்றும், என்றும் நான் அறிவேன்.

நான், சக்கு சக்கரம், கதை பத்மங்களுடன் வந்திருந்தால் என்னைக் கண்டவுடன் நீங்கள் அஞ்சி ஓடிவிட்டிருப்பீர்கள். அல்லது கண்காட்சியில் ஒரு காட்சிப்பொருளாக வைத்திருப்பீர்கள். உங்களில் ஒருவனைப் போலச் சாதாரணமான மனிதனாக இருந்தாலும் என்னை நீங்கள் பொருட்படுத்தியிருக்க மாட்டீர்கள். அதனால்தான் ஒரு மனித வடிவை எடுத்து மகிமைகளைச் செய்து வருகிறேன். ஆத்மீக மறுமலர்ச்சியே எனது குறிக்கோள்.

தர்ம மார்க்கம், பிரம்ம மார்க்கம் என்ற இரண்டையும் உங்களுக்குக் காட்டுவதற்கே வந்திருக்கிறேன். என்னை நோக்கி நீங்கள் ஓரடி முன்னேறினால் நான் உங்களை நோக்கி மூன்றடி வருகிறேன்.

துன்பச் சுமையைச் சுமந்து கொண்டு என்னிடம் ஒருவன் வரும்போது நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். ஏனென்றால் என்னிடம் உள்ள அருட் பொருள் அவனுக்குத் தான் வேண்டியிருக்கிறது. (ப. 278 பா. 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதனசாரதியும் பார்த்தசாரதியும் நானே. அவைகள் பகவத் கீதையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன: நான் தர்மத்தினை அதனுடைய மேலான நிலைக்கு உயர்த்தியாக வேண்டும். என் நினைவிலேயே ஒன்றிக் கிடப்பவர்களின் சுக சௌக்கியங்களைக் கவனித்தாக வேண்டும்.

எல்லா உயிரினங்களிலும் என்னைக் காண்பதும், எனக்கு எவ்விதமாகத் தொண்டு செய்ய விழைகிறீர்களோ அந்த விதத்தில் அனைவருக்கும் சேவை புரிவதும் தான் என்னை மகிழ்விக்கச் சிறந்த வழி.

என்னைக் கட்டாயப் படுத்தக்கூடியவர்கள் யாரும் இல்லை. நான் வினையாற்றுவதால் எந்த விதமான ஆதாயத்தையும் நான் அடைவதில்லை. வழி காட்டவும், வழி தவறியவர்களை நேர்வழிப்படுத்தவும், கற்பிக்கவும், எல்லாவற்றையும் நோக்கவும் நான் ஓய்வின்றி வினையாற்றுகிறேன். நான் அசைவற்று இருந்தால் உலகம் என்னும் கோள் சுழலுவது எவ்வாறு? எனக்கு நிர்வாகியோ, செயலாளரோ, காவலரோ, உதவியாளரோ யாரும் இல்லை. இங்கேயும் மற்ற இடங்களிலும் சிறு சிறு விஷயங்களைக் கூட நானாகவே முன்னின்று செய்து கொள்ளுகிறேன். உயிரினங்களின் ஆனந்தம் என்னும் ஆகாரத்தைத் தவிர வேறு உணவு எனக்குத் தேவையில்லை. நான் ஆனந்தத்தின் வடிவம். என் இயல்பு ஆனந்தம். ஆனந்தம் தான் என் அடையாளமும் கையொப்பமும்.

நான் எப்பொழுது ஓய்வும், நிம்மதியும், நிறைவும் பெறுவேன் என்று கூறட்டுமா? பற்றுதல்களைக் களைவதன் மூலமாக, சேவை எனப்படும் ஆன்மீக ஒழுக்கங்களைக் கைக்கொள்வதன் மூலமாக நீங்கள் ஆனந்தம் அடைகிறீர்கள் என்று நான் அறியும்போதுதான் நான் நிறைவு பெறுவேன்.

நான் எப்பொழுதும் ஏதாவது ஒரு பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன் என்றால் அது உங்களின் நன்மைக்காகத்தான். நான் வினையாற்றாவிடில் என்னைக் கேட்பார் யாருமில்லை. அதனால் நான் இழப்பது எதுவும் இல்லை. எப்பொழுதும் ஏதாவது செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற தூண்டுதல் என்னிடம் இல்லாத போதும், நான் எப்பொழுதும் ஓயாது வினையாற்றுவதை நீங்கள் காணலாம். உங்களை உற்சாகப்படுத்தவும், ஊக்கம் கொள்ளச் செய்யவும், உங்களுக்கு உதாரணமாக விளங்கவுமே நான் ஓயாது பணி செய்கிறேன். நான் பணிபுரிதலைக் கண்டு ஒவ்வொரு விநாடிப் பொழுதையும், இறைவனை நோக்கிச் செல்லக் கிடைத்த பொன்னான வாய்ப்பாகக் கருதி நீங்கள் பணிபுரிய வேண்டும் என்பதற்காகவே.

(ப. 101 - பா. 103)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



பிரகலாதனின் பிரார்த்தனை.

பிரபு உமது பாத கமலத்தைப் பூசிக்கும் வரத்தை அருளுங்கள். உமது திருவடிகளை வணங்குபவர்களின் தோழமையை அருளுங்கள்.

எல்லா உலகங்களிலும் உள்ள உயிரினங்கள் அனைத்தின் மேலும் ஆழ்ந்த, விசாலமான, எல்லையற்ற இரக்கம் கொள்ள அருளுங்கள்.

❊ ❊ ❊

பொழுதினை அன்போடு துவக்கி
அன்பிலே வாழ்ந்து
அன்பினால் நிரப்பி
அன்போடு கழித்து
அன்போடு முடிவாக்கு.

இறைவனை அடைவதற்கான வழி இதுவே.

❊ ❊ ❊

'தேவாலயத்தில் பிறப்பது நன்று இறப்பது சிறப்பன்று' என்பது போல, மனம் புத்தி ஆகியவைகள் விதிக்கும் எல்லைகளைக் கடந்து பயணம் மேற்கொண்டு, எல்லையற்ற, எங்கும் நிறைந்த, முழுமுதற் பொருளான நிலையான ஆத்மாவை அடைய வேண்டும். (ப 211- பா3)

## பலியாத பிரார்த்தனையில்

கடவுள் கடின இதயம் படைத்தவர். பிரார்த்தனைக்குச் செவி சாய்க்கவில்லை. தமது படங்களில் அவருடைய அனுக்கிரகத்தைக் காட்டும் அடையாளங்களைத் தோற்றுவிக்கவில்லை; ஆறுதல் தர, உறுதி கூற அசரீரியாகப் பேசவில்லை; என்று குறை கூறுகிறீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். கடவுள் அன்புருவானவர். அன்பே இறைவன், இறைவன் உங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்க்கவில்லை என்றால், உங்கள் பிரார்த்தனை இதயத்தின் ஆழத்திலிருந்து வரவில்லை.

அந்தப் பிரார்த்தனை வெறும் நடிப்பு. கபடம் நிறைந்தது என்றே கொள்ள வேண்டும். உன்னிலிருந்து வேறான, கொடுங்கோலனான, வருந்திப் பணிபுரிய வைப்பவன் ஒருவனை நோக்கிச் செய்யும் பிரார்த்தனை போன்ற நடிப்பே அது. கடவுள் உனக்கு மிகவும் நெருங்கிய, மிகுந்த அன்பு கொண்ட உறவினர். (ப 261 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்த(னின்)ர்களின் துன்பங்களை ஏற்ற பொழுது- 10

என்னைச் சரணடைந்தவர்களின் துன்பங்களை ஏற்றுக் கொள்ளுவது என் டணிகளில் ஒன்று. எனக்கு எந்த விதமான துன்பமும் இல்லை. அதனால் நீங்கள் வருந்த வேண்டிய அவசியமும் இல்லை. அளித்தல் — பெறுதல் என்று இது அன்பு விளையாட்டு, அன்பின் மிகுதியால் நான் இதனை ஏற்றுக் கொண்டேன், அன்பு வலியை அறிவதில்லை. பின் நான் துன்புறுவது எப்படி?

தம்மிடம் நம்பிக்கை கொண்டவர்களுக்காக கிறிஸ்து தமது உயிரையே தியாகம் செய்தார். சேவையே கடவுள். தியாகமே கடவுள் என்ற உண்மையை அவர் பரப்பினார்.

பாவிகளோடு உணவு கொண்டதைப் பற்றி ஒருவர் கிறிஸ்துவிடம் கேட்ட பொழுது ''பாவிகளுக்காகத் தான் நான் வந்தேன்; உடல் நலத்தோடு இருப்பவர்களுக்கு வைத்தியரின் உதவி தேவையில்லை'' என்றார் யேசுநாதர்.

தவறிழைத்த குழந்தைகளுக்காக, வழி தவறிய குழந்தைகளுக்காகத் தான் நான் வந்துள்ளேன். புனிதமானவர்களாக இருந்தால் தான் என் அன்புக்குப் பாத்திரமாக முடியும் என்று நீங்கள் கூறுவது உடல் நலத்தோடு இருப்பவனுக்குத் தான் வைத்தியரின் உதவி தேவை என்று கூறுவதைப் போன்றது. புனிதமானவர்களுக்கு பகவானின் உதவி தேவையில்லை.

(ப. 165 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை



நீங்கள் என் பெயரில் சேவைபுரிய விரும்புகிறீர்கள் இல்லையா? எனக்கு ஆயிரம் தலைகளும், கண்களும், பாதங்களும் உள்ளன.

வேதங்கள் கடவுளை ''சஹஸ்ர சீர்ஷா புருஷ'' என்கிறது.

அதாவது, இறைவன் ஆயிரம் தலைகளை உடையவன் என்கிறது. இங்கே ஆயிரக் கணக்கில் வந்து கூடி இருக்கும் முதியவர்கள், குழந்தைகள், நோயாளிகள், துயரமுற்றவர்கள் ஆகிய அனைவரும் நானே; அவர்களின் உருவில் உள்ள எனக்குச் சேவை புரியுங்கள்.

(ப 275 - பா 3)

II

ஏழைகளுக்கு அன்னமிடுதலையும், சிறையில் வாடுபவர்களுக்கும் குருடர், தொழு நோயால் வருந்துபவர்கள், மனநோய் மருந்தவமனை நோயாளிகள், செவிடர்கள், ஊமைகள் ஆகியவர்களுக்குச் செய்யும் சேவைதான் மிக உயர்ந்த சாதகம்.

(ப 402 பா 3)

III

இறைவனும் தானும் ஒருவரே என்ற உண்மையை உணர்ந்தவரிடம் இயல்பாக சேவை வெளிப்படுகிறது. ஏனெனில் இறைவனுக்கும், மனிதனுக்கும், படைத்தவனுக்கும் படைப்புக்கும், சக்திக்கும் பொருளுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை. ''உனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும். என்று விரும்புகிறாயோ அதனை நீ மற்றவர்களுக்குச் செய்!'' என்ற பொன் மொழிக்கு, எல்லாம் ஒன்றே என்ற ஐக்கிய பாவம் தான் தத்துவ ரீதியிலான அடிப்படை.

(ப 356 பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்



ஜபம் அல்லது தியானம் செய்ய அமர்ந்திருக்கும்போது யாராவது துன்பப் பெருமூச்சு விடுவதைக் கேட்டால் உடனே எழுந்து சென்று விசாரித்து அவருடைய துன்பத்தைப் போக்க முயற்சி செய்ய வேண்டும். அதனால் கிடைக்கும் பலன், தியானம் செய்திருந்தால் கிடைக்கக் கூடிய பலனை விடக் கூடுதலாகவே இருக்கும்.

அன்பெனும் விதையை இதயத்தில் ஊன்றி அது குடும்ப முழுவதிலும் முளை விட்டு வளர்ந்து உற்றார், உறவினர், இறுதியாக மனித குலம் முழுவதையும் அதனுடைய நிழலின் கீழ் கொண்டு வர வேண்டும்.

தியானத்தைக் கற்பிக்கும் போது விளக்கின் சுடரை அல்லது மெழுகு வர்த்தியின் சுடரைத் தியானம் செய்வதே சிறந்த முறை. விளக்கின் சுடரைப் புருவ மத்திக்குக் கொண்டு வருவதாகக் கற்பனை செய்து கொள். மெதுவாக அந்தச் சுடரை இதயக்குகைக்குக் கொண்டு போ. சுடர் செல்லும் பாதை முழுவதையும், இதயத்தையும், அது ஒளி மயமாக்கட்டும். வெறுப்பு, பேராசை, அகங்காரம் ஆகிய இருளை அந்த ஒளி போக்கட்டும். உன் உடல் முழுவதும் ஒளி வெள்ளமாகப் பாயட்டும். பின்னர் அந்த ஒளி உன்னிடமிருந்து வெளிப்பட்டு உன்னைச் சுற்றிலும் பரவட்டும்.

சிறிது சிறிதாக அந்த ஒளி வட்டம் பெரிதாகி மனிதகுலம் முழுவதையும், எல்லா உயிர்வகைகளையும், நீ நண்பர்களாக எண்ணுபவர்களை மட்டுமின்றி, நண்பர்கள் அல்ல என்று ஒதுக்கப்பட்டவர்களையும் கூட அந்த ஒளிவட்டம் தழுவட்டும்.

(பக். 404 - பாகம்3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை இறைவனிலிருந்து வேறானது என்று எண்ணும் குறுகிய எல்லையினையுடைய பார்வையை அழிப்பதற்கு மேலெழும் தீயில் ஆகுதி செய்ய வேண்டும். (வெளிப்படுத்தல், தூய்மைப்படுத்தல், பிரித்துணரச் செய்தல் ஆகியவைகளின் செந்தணலே வேள்வித்தீ) தெய்வீகம், தெய்வீகத்தின் மூலமாக, தெய்வீகமான இவைகள் அனைத்தையும் படைத்துள்ளது.

சர்வம் பிரம்ம மயம். இவைகள் எல்லாம் பிரம்மமே. நிவேதனப் பொருள்கள் பிரம்மம். தீ பிரம்மம். நிவேதனங்களை அளிப்பவர் பிரம்மம். இலக்கும் பிரம்மமே. அற்பமான பொருள்களைக் கூட பிரம்மமாக மாற்று. பொருளியல் உலகில் காண்பவை அனைத்தும் தெய்வீகமே. எல்லைக்குட்பட்ட குறுகிய நோக்கத்திற்கு, கிட்டப்பார்வைக்கு, அஞ்ஞானம் நிரம்பிய பார்வைக்கு அவைகள் வேறானவைகளாகத் தோன்றுகின்றன.

இந்த வெள்ளிச்சிலையின் தலையணி, உடைகள், மேடை, தசைகள், முகம், கண்கள் ஆகிய அனைத்தும் வெள்ளியாலனவையே.

இதனைப் புரிந்து கொண்டு சர்வம் பிரம்ம மயம் என்று உரக்க அறிவிப்பாயாக. (பக். 104 - பாகம் 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாமமாக இருந்தாலும் சரியே, இடைவிடாது ஓதிவந்தால் அது அந்த மனிதருக்கு நன்மை செய்கிறது. பொருளியல் மோகம் நிறைந்த இந்த யுகத்தில், மனிதன் கடவுள் நிலைக்கு உயரவும், அவரைத்தம் அருகில் ஈர்க்கவும் அது ஒன்றுதான் வழி. நாமஸ்மரணை அவருடைய அருளைப் பெற்றுத் தருகின்றது. மீரா, இறைவனின் நாமத்தை நாவில் வைத்துக்கொண்டே நஞ்சைப் பருகினாள். அந்த நாமத்தின் மகிமையால் நஞ்சும் அமிர்தமாக மாறியது. வாழ்க்கையில் ஒவ்வொரு இரவையும் பகலையும் இடைவிடாத நாமஸ்மரணை மூலம் தூய்மைப்படுத்துவீராக. விளம்பர நோக்கத்தோடு என் நாமத்தையும் ரூபத்தையும் ஜபிக்க வேண்டும் என்று நான் கூறுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஒரு புதிய மதப்பிரிவைத் தோற்றுவிக்க நான் வரவில்லை.

ஏகமான பரம்பொருளை அறியவும் துதிக்கவும் மக்கள் பயன் படுத்திய, பயன்படுத்தி வருகின்ற எல்லா நாமங்களின் உருவங்களும் இந்த சாயிரூபமே என்று அறிவீராக. இராமன், கிருஷ்ணன், ஈசுவரன், சாயி என்ற நாமங்களில் வித்தியாசத்தைப் புகுத்துவதை நான் விரும்பவில்லை. அவைகள் அனைத்தும் என் நாமங்களே.

நான் கொண்டிருக்கும் சமத்துவத்தை சலனமற்ற பேரமைதியை, பிரேமையை, பொறுமையை, தெய்வீக பேரானந்த நிலையைப் பெருக்கிக் கொள்ள முயலாமல் என்னை மட்டும் வணங்குவதால் என் நாமத்தை ஓதுவதால் யாது பயன்? உங்களில் அநேகம் பேர்கள் நான் ஏதாவது செய்தியை அளிக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். என் வாழ்க்கை முறையே நான் உங்களுக்கு அளிக்கும் செய்தி.

இச்சையற்ற நிலை, துணிவு, நம்பிக்கை, துன்புறுபவர்களுக்கு தொண்டு செய்வதில் ஆர்வம் ஆகியவைகளை வெளிப்படுத்தி வாழ்வீர்களேயானால் அதுதான் நான் அளிக்கும் செய்தியின்படி வாழும் முறை, (பக். 14 - 15 பாகம் iii)

II

இறைவனின் நாமங்களின் மதிப்பையும் சக்தியையும் உணர்ந்து அதிலேயே ஆழ்ந்துவிட வேண்டும். கிருஷ்ணா என்ற சொல்லின்பகுதி கவரும், மயக்கும், சக்தி படைத்தவர் என்ற பொருள் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணன் என்பது நாபிப் பகுதியில (மதுரா) பிறந்து வாய்ப்பகுதிக்கு (கோகுலம்) அனுப்பப்பட்டு, இனிய சுவையை உரைக்கூடிய நாவினால் (யசோதா) பேணிவளர்க்கப்பட்ட தெய்வீக தத்துவம். கிருஷ்ணனை உங்கள் நாவினால் (நாமம் சொல்லி) பேணி வளர்க்க வேண்டும். கிருஷ்ணபரமாத்மா காளியனின் தலைமேல் நடனமாடியபோது அந்த நாகம் தனது நஞ்சினையெல்லாம் வெளியேற்றியது போல, கிருஷ்ண னின் நாமத்தை ஓயாது ஓதிவந்தால் தீயவினைகள் முழுவதுமாக மன திலிருந்து மறைந்து போகும். (பக். 99 - 100 பாகம் III)

III

எல்லோரும் இறைவனால் படைக்கப்பட்டு அவனது அருளையே பெற்று வாழ்வதால் உலகில் நாஸ்திகர் என்றும், தெய்வ நம்பிக்கை அற்றவரென்றும் எவரும் இருப்பதாக நான் எண்ணுவதில்லை. ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு என்ற ஊற்றும், உண்மையென்ற உறுதியான பாறையும் இருக்கிறது. அந்தச் சத்தியமே கடவுள். ஒவ்வொருவரின் ஆத்மாவுக்குள்ளும் தெய்வீகம் இருக்கிறது.

முறையாக இடைவிடாது 'ராம ராம' என்று, நாம ஜெபமாகிய போறிங் யந்திரத்தைக் கொண்டு இடித்து இடித்துத் துளைத்தால், தெய்வீக வாழ்வென்னும் ஊலக்கண் திறந்து அருள் நீர் வேகமாக வெளிப்பட்டு யாவருக்கும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும். (பக். 273 பாகம் I)

## நகரசங்கீர்த்தனம் 15

நகர சங்கீர்த்தனம் என்பது பாகவதத்தைப் பயிற்சியில் கொண்டு வருவதாகும். இரவு ஆழ்ந்த உறக்கத்துக்குப் பின் ஐம்பொறிகளும் இயக்கம் குறைந்த விழிப்பற்ற நிலையில் இருக்கும்போது பரபரப்பு மிகுந்த பகற்பொழுதில் தலையிட்டு பிணைபடும் முன்பாக சந்தடியற்ற தெருக்களில், குளிர்ந்த, நெஞ்சையள்ளும் அமைதி நிரம்பிய வைகறைப் பொழுதில், ஒவ்வொரு திறந்த கதவு, சாளரங்கள் வழியாக இறைவனின் நாம நறுமணத்தை ஏந்திச் சென்று மணம் பரப்பச் செய்து கொண்டு வரும் இந்தச் செயல் தனக்கும் சமூகத்திற்கும் செய்யும் தொண்டில் மிக உயர்ந்த நிலையாகும். இது உடலுக்கு நலம் செய்யும் மருந்து. மனதுக்கு விழிப்பைத் தரும் பயிற்சி.

ஒவ்வொரு பாடலும் தொற்று நோயாகப் பற்றிக் கொண்டு வருத்தும் சோம்பல் என்னும் தளையைத் தறிக்கும் ஆயுதம். பாடல்கள் அந்தப் பகுதி மக்களுக்கு மற்றும் ஒரு நாளைப் பரிசாகத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்தும்படி நினைவுபடுத்துகின்றன.

**இது ஒரு அன்புப்பணி**
**புனிதப்படுத்தும் வேள்வி**

சினம், செருக்கு, துன்பம் ஆகியவைகளின் எழுச்சிக் குரல்களால் மாசு படிந்த காற்று மண்டலத்தை தூய்மையாக்கும் திருமிநாசினி. இது உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் படிந்த களங்கத்தைக் கழுவிப் போக்குகிறது. (பக். 97 பாகம் III)

இவ்வாறாகத்தான் ஜயதேவர், சௌராங்கர், துகாராம் கபீர், புரந்தரதாசர் ஆகியவர்கள் ஒவ்வொரு இதயத்திற்கும் இறைவனை ஏந்திச் சென்றார்கள். பொழுது புலர்வதற்குச் சில மணி நேரம் முன்னதாகவே கூடி கடவுளின் புகழைப் பாடியவாறே தெருக்களில் மெதுவாக நடந்து செல்லுங்கள். உறங்குபவர்களை நாமத்தால் எழுப்புங்கள். வெறுப்பு, பேராசை, கட்சிவெறி, அச்சம் ஆகியவைகளின் கூச்சலினால் களங்கமடைந்த காற்று மண்டலத்தை இறைவனின் நாமத்தால் தூய்மையாக்குங்கள். இறைவனின் நாமத்தோடு நாளைத் தொடங்க உதவும் இந்தச் சேவையைக் காட்டிலும் சிறந்த சேவை வேறென்ன இருக்கிறது? (பக். 20 பாகம் III)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு 16

நானிருக்கப் பயமேன்? நீ என்னுடையவனானால் நான் உன்னுடையவனாவேன். என்னைத் தரிசித்த க்ஷணமே உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. உன்னுடைய சுமையை நான் தாங்கிக்கொள்வேன். என்னிடம் இருந்து எவ்வளவு ஆனந்தத்தை எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் எடுத்துக்கொண்டு உன் துக்கங்களை எனக்கு விட்டுவிடு.

என்னை வழிபடுவதற்கு அஷ்டாங்க, ஷோடசாங்க பூஜை முறைகள் தேவையில்லை. எங்கே பக்தி இருக்கிறதோ அங்கே நானிருக்கிறேன். என்னுடைய பொக்கிஷம் எப்பொழுதும் நிறைந்து வழிகின்றது. வண்டி வண்டியாக வேண்டுமளவு இப்போதே எடுத்துச் செல்லுங்கள். என்பால் கவனம் செலுத்துகிறவனுக்கு ஒரு துன்பமும் வராது. நாஸ்திகர், அனுஷ்டானமற்றவர், துஷ்டர், இவர்கள் சகவாசத்தைத் துறந்து எல்லோரிடமும் பணிவாகவும், எளிமையாகவும் நடந்துகொள். எல்லாப் பொருட்களிலும் என்னைப் பார். பூச்சி, புழு, எறும்பு கண்ணுக்குத் தோன்றுவன, தோன்றாதன அசைவன, அசையாதன ஆகிய எல்லாப் பொருட்களும் எனக்கு உடலும் வடிவமும் ஆகும். என் களஞ்சியம் நிறைந்திருக்கிறது. அவர் எதை விரும்பினாலும் தருவேன். ஆனால் அவர் அதனைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்தானா என்று ஆராய்ந்தே கொடுப்பேன்.

முழுமனத்தோடு என்பால் திரும்பு, நானும் அப்படியே உன்பால் திரும்புவேன். ஆத்மசத்தியடைவதற்குத் தியானம் அவசியம். அதைத் தொடர்ந்து ஆற்றினால் ஐம்புலனின் வேகம் அடங்கும்.

தாகம் ஆனவருக்குத் தண்ணீர் கொடு. பசித்தோருக்கு உணவுபடை. உன்னுடைய திண்ணையை இளைப்பாறுவதற்கு அயலாருக்குக் கொடு. கொடுக்கப் பிரியமிருந்தால் கொடு. இல்லாவிடில் வேண்டாம். அதற்காக கடிநாய்போல் குரைக்காதே.

ஓரிடத்தில் நுழைவதற்கு எனக்கு வாசல் வேண்டியதில்லை. நான் எல்லா இடத்திலும் எப்பொழுதும் இருக்கிறேன். பசியால் வருந்துகிறவனுக்கு, கடவுள்பற்று கவர்ச்சியைத் தராது. கர்வம் அகந்தை யாவற்றையும் ஒழித்துவிட்டு உன் இதயத்தில் வாசஞ் செய்யும் என்னையே சரணடை.

(என்று சாயிசத்சரிதத்தில்வரும் ஷிர்டிபாபாவின் அருள் மொழிகள் இன்றும் சத்யசாயிபாபாவின் திருவாக்கிலிருந்து புறப்படுவதை ஒவ்வொருநாளும் பக்தர்கள் கேட்கிறார்கள்.)

(பக். 252 பா 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கடவுள் யார்? அவரை எங்கே காணலாம்? அவரைக் கண்டது யார்? என்ற கேள்விகளை நீங்கள் எழுப்பலாம். இதை விளக்க ஒரு கதை சொல்கிறேன். புனிதயாத்திரை மேற்கொண்டிருந்த ஒரு சன்னியாசி வழியில் ஒரு கிராமத்திற்குள் நுழைந்தார். துறவி என்பதற்கு அடையாளமாகிய அவருடைய காவியுடையைக் கண்ட அவ்வூர் மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கடவுளைப் பற்றிய பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். இறைவனின் மேல் நம்பிக்கை அற்றவர்கள் அவர்கள்.

''கடவுளை எங்களுக்குக் காட்ட முடியுமா? என்று கேட்டனர். ''காட்ட முடியும்'' என்றார் துறவி. ஆனால் அதற்கு முன் சிறிது பால் கொண்டு வந்து தரும்படி கேட்டார். களைப்பாக இருப்பதனால் பால் கேட்கிறார் போலும் என்று எண்ணி அவ்வூர் மக்கள் ஒரு கிண்ணத்தில் பால் கொண்டு வந்து கொடுத்தனர். ஒன்றும் பேசாமல் தனக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த பாலையே வெகு நேரமாக உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தரார் அந்தத் துறவி. பொறுமை இழந்த அந்த ஊர் மக்கள், துறவி உறுதி கூறியபடி, விரைவு கொண்டு கடவுளைக் காட்டும்படி கூச்சலிட்டனர்.

பின்னர் ''பாலையே வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருப்பது ஏன்?'' என்று கேட்டனர். ''பாலில் வெண்ணெய் இருப்பதாக கேள்விப் பட்டிருக்கின்றேன். அதனைப் பார்க்கத்தான் முயற்சிக்கின்றேன்'' என்றார் சன்னியாசி. அவருடைய அறியாமையைக் கண்டு நகைத்தனர். முட்டாள், பேதை என்று துறவியை ஏளனம் செய்தனர். ''வெண்ணெயைத் தெளிவாகக் காணவேண்டுமென்றால் பாலைக்காய்ச்சி ஆற வைத்து தயிராக்கிப் பின்னர் அதனைக் கடைந்து வெண்ணெயை எடுக்கவேண்டும் என்று உமக்குத் தெரியாதா? இப்பொழுது அந்த வெண்ணெய், பாலின் ஒவ்வொரு துளியிலும் மறைந்து கிடக்கிறது'' என்றனர்.

''நீங்கள் என்னைக் கேட்ட கேள்விக்கு நீங்களே விடை கூறி விட்டீர்கள். இந்த உலகில் உள்ள ஒவ்வொரு உயிரிலும் ஒவ்வொரு பொருளிலும் இறைவன் நிறைந்து நிற்கிறான். அவனைத் தெளிவாகக் கண் முன்னே காண வேண்டுமானால் சாதகம் என்னும் செயன் முறையில் ஈடுபட வேண்டும். அப்பொழுதுதான் அவனைக் காணமுடியும். என்னைக் கேள்விகள் கேட்பதால் மட்டுமே கண்டு கொள்ள முடியாது' என்றார் துறவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தச் சாதகத்துக்கு மிகவும் தேவையான, முக்கியமான பொருள் பிரேமை. உயிர்களிடத்துப் பிரேமை கொள்ளாமல் ஆற்றப்படும் சாதகம் சாத்தானைத்தான் வெளிப்படுத்தும்.

"இதனை இன்னும் சற்றுத் தெளிவாக விளக்கிக் கூறுகின்றேன் பம்பாய் வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்படும் பாடல்களைச் சுமந்து கொண்டு வரும் ரேடியோ அலைகள் இங்கு நம்மைச் சுற்றி உள்ளன. டில்லி வானொலி நிலையத்தில் இருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைச் சுமந்து வரும் ஒலியலைகளும் இங்கு உள்ளன. உண்மையில், உலகில் எல்லாப்பகுதிகளிலுமிருந்து ஒலிபரப்பப்படும் அத்தனை நிகழ்ச்சிகளையும் சுமந்து வரும் ரேடியோ அலைகளும் இங்கு இப்பொழுது நம்மைச் சுற்றிலும் உள்ளன. அந்த நிகழ்ச்சிகளை நம்மால் கேட்கவோ காணவோ முடியா விட்டாலும் அவைகள் இங்கு உள்ளன என்பதை யாராலும் மறுக்க முடியாது. அவைகளைக் கேட்க ரிசீவர் எனப்படும் ஒரு யந்திரம் தேவை. அதனை ஒலிபரப்பும் நிலையத்தின் குறிப்பிட்ட அலை வரிசையில் திருப்பி ஒழுங்குபடுத்தினால் அந்த நிலையத்தின் ஒலிபரப்பை இங்கே கேட்கலாம்.

இங்கே இப்பொழுதுள்ள கடவுளைக் காண வேண்டுமானால் அதற்கு நமக்கொரு மந்திரம் தேவை. அதனைக் குறிப்பிட்ட மனத்தோடு குறிப்பிட்ட அலைவரிசையில் (ஒரு முகப்பட்ட மனத்தோடு ஜபித்து) குறிப்பிட்ட இடத்தில் திருப்பி ஒழுங்கு படுத்தினால் (பிரேமையோடு துதித்தால்) சர்வவியாபியின் ஒலி பரப்பை (இறைவனின் முன்னிலையை உணரலாம்.) கேட்கலாம். சரியான ஒலி அலைக்கு திருப்பாவிட்டால் ஒலிபரப்பு நிகழ்ச்சியை கேட்க முடியாதது மட்டுமல்ல, தொல்லை தரும் ஓசை காதைப் பிளக்கும். தன்னலமின்றி அன்பைச் சொரிந்தால் அன்றி கடவுளைக் காணமுடியாது. காணமுடியாதது மட்டுமல்ல கடவுளுக்குப் பதிலாக பிசாசுகளைச் சந்திக்கும் தொல்லைகளுக்கும் கூட ஆளாக நேரிடலாம். மனதை ஒரு முகப்படுத்தாவிடில் அது பல திசைகளிலும் ஓடி குழப்பத்தை உண்டுபண்ணும்.

"உன் உடன்பிறந்த சகோதரனையோ. சகோதரியையோ அருகில் அழைத்துக் கொள்வது போல அனைவரையும் உன் அருகில் இழுத்துக் கொள்வதற்கும் இறைவனின் அருளைப் பெறுவதற்கும் அன்பே சிறந்த கருவி. உன் திறமை முழுவதையும் கவனம் முழுவதையும் செலுத்தி உன் பொறுப்பை நிறைவேற்ற முடிவு செய்து கொள்"

(பக் 416 பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைமூலமாக



அதோ அந்த மரத்தைப் பாருங்கள். அதனுடைய வேர்கள், அடிமரம், கிளைகள், கொம்புகள், பட்டை, நடுப்பகுதி, அதன் சாறு, இலைகள், அரும்புகள், மலர்கள், கனிகள், விதைகள் ஆகிய ஒவ்வொன்றும் வெவ்வேறு சுவையும், நிறமும், உணர்வும், மணமும், ஒலியும் கொண்டதாக இருப்பினும் அவைகள் அனைத்தும் ஒரே விதையில் இருந்து தோன்றியவைகளே என்பதையாரும் மறக்கமுடியாது. ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான பயனும் செயல்திறனும் உடையனவே.

இவைகள் அனைத்தையும் பூமியும் பகலவனும் தான் ஊட்டி வளர்க்கிறார்கள். ''பீஜம்மாம் சர்வபூதானாம்'' என்று பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். அதாவது படைப்பு முழுவதற்கும் ஆதாரவித்து நானே என்று கூறுகிறார். அகங்காரத்தின் காரணமாக இன்றைக்கு மனிதன் நிந்தனை, வெறி, பேயருக்கு மாசு கற்பித்தல், படுகொலை, வெறுப்பு, போர் ஆகியவைகளில் ஈடுபட்டு வருகிறான். சினத்தைத் தணிக்க சிறந்த மருந்து அன்பே.

(ப 289 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெபம்



எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

உதவி கேட்டுப் பிரார்த்திக்கும் பிரார்தனைக்குச் செவி சாய்த்து, ஓடிவர கடவுள் எப்பொழுதும் தயாராக இருக்கிறார். அவருடைய கிருபையை எதிர் பார்த்துக் காத்திருக்கும் நீங்கள், துன்பத்தில் அழுந்திக் கிடக்கும் மக்களின் அழுகுரலுக்குச் செவி சாய்க்க மறுக்கிறீர்கள்.

பின் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாவது எப்படி?.

கதவின் சிறு சந்து வழியாகக் கூட உள் நுழைந்து இருளைப் போக்கி ஒளியைப் பரப்பவும், குளிர் மிகுந்த இடங்களில் வெப்பத்தை நல்கவும் ஆதவனின் ஒளிக்கதிர்கள், கதவு திறக்கப்படுவதற்காக காத்து நிற்பதைப் போல கடவுளும் உன் வீட்டு வாயிலில் காத்து நிற்கிறார்.

தேற்றுவாரின்றி ஆறுதலுக்கும் இரக்கத்திற்கும் ஏங்கி நிற்கும் ஏழை மக்களின் துன்பங்களைக் குறைத்து அவர்களுடைய வாழ்வை ஒளிமயமாக்க ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று அவரைப் போலவே நீங்களும் கூடக் காத்து நிற்க வேண்டும். படைத்தவனின் மகிமையை நகர சங்கீர்த்தனம் மூலம் மக்களுக்கு அறிவித்து அவர்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

(ப 372 – பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

# மற்றவனை வெற்றி கொள்ளுதல் என்பது.........

கர்ணனுடைய தாய் தன்னுடைய முதல் குழந்தையை கங்கையில் எறிந்து விட்டாள். கங்கையில் மிதந்து சென்ற குழந்தையை தேர்ப்பாகன் எடுத்து தனது சொந்த குழந்தை போன்று வளர்த்து வந்தான். பின்னர் கர்ணனை தேர்ப்பாகன் கௌரவர்களிடம் கொண்டு சேர்த்தான். பாண்டவர்களை பழிவாங்குவது என்று பேதம் செய்து கொண்டவர்கள் கௌரவர்கள். அவர்களது வலது கையாக விளங்கினான் கர்ணன். பாண்டவர்களும் கர்ணனை வெறுத்தார்கள். அவனோடு போர் புரிந்தார்கள். கர்ணனை எப்படியாவது அழித்து விடுவது என்று உறுதிபூண்டார்கள். அதில் வெற்றியும் பெற்றார்கள். கர்ணன் இறந்த பின்னரே அவன் தங்களுடைய மூத்த சகோதரன் என்பதும், தாங்கள் வாசம் செய்த அதே கருப்பையில் அவனும் குடியிருந்தான் என்பதும் தெரியவந்தது. பாண்டவர்கள் கதறினார்கள், வருந்தினர், தங்களை தாங்களே சபித்துக்கொண்டனர்.

எல்லா மனிதர்களும் சகோதரர்களே, ஒவ்வொருவரும் பிரேமை, சேவை, மரியாதை ஆகியவைகளை பெறும் உரிமையுடையவர்களே. இந்த உண்மையை அறிந்து கொள்ளாத காரணத்தால் அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கிறார்கள், போராடுகிறார்கள், கொலை புரிகிறார்கள். பழிவாங்கும் எண்ணத்தில் நஞ்சூட்டுகிறார்கள். மற்றவனை வெற்றி கொள்ளுதல் என்பது தன்னைத்தானே சிறுமைபடுத்திக் கொள்ளுதலே, இந்த உண்மையை ஒன்றிப்பை ஏக தத்துவத்தை அகங்காரம் எனும் கண்ணாடி மூலமாகப் பார்க்கும் போது அது வேற்றுமையாகத் தோன்றுகிறது.

(ப. 61 – 62, பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் 21

"வித்யா ததாதி விநயம்" கல்வி மனிதனிடம் பணிவை ஏற்படுத்த வேண்டும், அறிவாளிகள் தாம் எதையும் அறிந்து கொள்ளவில்லை என்று பணிவு கொள்ளுகிறார்கள். மூடன் தான் எல்லாவற்றையும் அறிந்து கொண்டு விட்டதாக கர்வம் கொள்ளுகிறான்.

பணிவும், கௌரவிக்கும் பண்பும் தான் கல்வியின் சரியான உண்மையான கனிகள். இன்றைக்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் முதலில் அடிபட்டு வீழ்வது இந்த மரியாதை செலுத்தும் பண்பு தான். கீதையில் "பண்டிதாஹ சமதர்சனஹ" பண்டிதர்கள் ஒற்றுமையைக் காண்பவர்கள், அவர்கள் பிரிவினையை வளர்க்க மாட்டார்கள். வெறுப்பைத் தூண்டமாட்டார்கள். எதை அறிந்து கொண்டால் எல்லாவற்றையும் அறிந்ததாகுமோ, அந்த ஒன்றைத்தான் நாடுவார்கள். ஒற்றுமையைத் தேடுவார்களேயன்றி போராட்டத்தைத் தேடமாட்டார்கள்.

இக்காலத்துப் பண்டிதர்களில் பெரும்பான்மையானவர்கள் வெறுப்பு பொறாமை, போராட்டம் ஆகிய நோய்களைத் தூண்டுவதையே தம் தொழிலாகக் கொண்டுள்ளார்கள்.

(ப. 72 பா 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியை நெறிப்படுத்துதல் 22

கர்நாடகத்தில் நான் கடந்த ஐந்து நாட்களாக சுற்றுப்பயணம் செய்து வருகிறேன். இப்பொழுது ஒன்றை உங்களுக்கு சுட்டிக்காட்ட விழைகிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் சாலை நெடுகிலும் நின்று கொண்டு என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஒவ்வொருவரின் இதயங்களிலும் இறைவனிடம் கொண்ட உண்மையான பக்தி மேலோங்கி வருகிறது என்பதை நான் அறிவேன். இந்த பக்தியை கட்டுப்பாட்டைக் கொண்டு ஒழுங்குபடுத்த வேண்டும். இந்த பக்தி உணர்வை கட்டுத்தளமாக மனம் போன போக்கில் விடக்கூடாது. என் பாதங்களைத் தொடவும் என் முன் விழுந்து வணங்கவும், நெருக்கித் தள்ளிக் கொண்டு ஓடிவருகிறீர்கள். பெண்களும், குழந்தைகளும், வயதானவர்களும், நோயாளிகளும் இருக்கிறார்களே என்று கூட நீங்கள் கவலைப்படுவதில்லை. என்னை நோக்கி ஓடி வரும் போது அவர்களின் மேல் விழுகிறீர்கள். உங்கள் பக்தியை வெளிப்படுத்த இந்த சாயியை நோக்கி ஓடிவரும் போது அந்த மக்களின் உள்ளே புகுந்துள்ள சாயியைத் துன்புறுத்துகிறீர்கள். அவர்களுள் வசிக்கும் சாயியை துன்பமிழைப்பதன் மூலமாக இந்த சாயியைப் பார்க்கவும், கேட்கவும் நீங்கள் மேற்கொண்ட தவத்தின் பிரயாசையின் பலன்கள் எல்லாம் வீணாகி விடுகின்றன.

பலவீனமானவர்கள் உடற்குறையுடையவர்கள், துன்புறுபவர்கள், பிணியாளர்கள் ஆகியவர்களிடம் அன்பு, சகிப்புத்தன்மை, பயபக்தி ஆகியவைகளைக் காட்டும் இயல்புகளைப் பெருக்கிக் கொள்ளுங்கள். அவர்களிடம் இரக்கம் காட்டுங்கள், கருணையோடு நடந்து கொள்ளுங்கள், உங்களுக்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள தெய்வீகமான பிணைப்பை எண்ணி அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்.

(ப 128 – பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதங்களை அகற்றுதல் 23

I

கிழக்கு கிழக்காகவும், மேற்கு மேற்காகவுமே இருக்கிறது. இந்த இரண்டும் ஒருநாளும் சந்திப்பதில்லை. இப்படி இரண்டாக இருப்பது ஏன்?

சிறு குழந்தையாக இருக்கும்போதே மனதில் பாதி உண்மையும் பாதி பொய்மையும் கலந்த எண்ணங்கள் (இது போன்ற தவறான எண்ணங்கள்) நிறைந்து விடுகின்றன. இந்த நினைவுப் பின்னல்கள் உறுதியான கொள்கைகளாகத் தோன்றுகின்றன. தொற்று நோயால் துன்புறும் பெற்றோர்களிடமிருந்து சில சமயங்களில் குழந்தைகளைப் பிரித்து விடுவதுண்டு. என் பொருட்டு அந்தக் குழந்தைகளைப் பெரியவர்களிடமிருந்து பிரித்துவிட்டால் நல்லது என்று நான் விரும்புகின்றேன். அப்பொழுது அவர்கள் என்னைப்பற்றி நன்றாக அறிந்துகொள்வார்கள் இல்லையா? கதிரவனுக்கு கிழக்கு, மேற்கு என்ற பேதம் இல்லை. கொடுமையாளர்கள் மனிதரின் மனதில் எரியும் தீ அணைந்து போக விடுவதில்லை. அதனைப் பிரகாசமாக எரிய விடுவதற்காகப் பின்னும் சற்று விசிறுவார்கள். கிழக்கு, மேற்கு என்ற பேதங்கள் உண்டுபண்ணுவார்கள். தங்களுடைய கௌரவத்திற்காகவும், தாங்கள் பயன் பெறவும் ஒருவர் மேல் ஒருவருக்கு வெறுப்பு உண்டாக்கும்படி தூண்டுவார்கள். ஒவ்வொருவரும் உண்மையைக் கொண்டு பொய்மையையும், மன வலிமையைக்கொண்டு தவறான எண்ணங்களையும், அன்பைக்கொண்டு வெறுப்பையும், அறிவைக்கொண்டு சினத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். சினம் மிகும்போது அதனைச் சாந்தப்படுத்து. பயமும் ஐயமும் தலைகாட்டும்போது என்னை நோக்கிப் பிரார்த்தி. புயலைப் போன்று, விண்வெளியில் நான் ஏற்றிவைத்துள்ள சூரியனின் சக்தியைப் போன்ற என் அகண்டாகாரமான சக்தியோடு இணைந்து வலிமை பெறுவாயாக.

நீ இப்பொழுது உணர்ந்து மகிழும் இந்த இனிய மெல்லிய தென்றலைப் பெற, என் சக்தியோடு இணைந்து இசை கூட்டு.

(ப. 180 – பா 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மனிதர்களும் சமமானவர்களல்ல.

ஒவ்வொருவருக்கும் கடமை, பொறுப்பு, நிர்வாகம் ஆகியவைகளில் சம உரிமை இருப்பதாக எண்ணுவது தவறு. எல்லாப் பசுக்களும் ஒரேமாதிரியானவை என்று சமமான விலை கொடுத்துப் பெறுவதில்லை. அவைகளில் சிலவற்றிற்குப் பால் சுரப்பது நின்றிருக்கலாம். சில சாதுவாகவும், சில மூர்க்கத்தனம் நிறைந்ததாகவும் இருக்கலாம். அது போல எல்லா, மனிதர்களும் சமமானவர்கள் அல்லர். ஒவ்வொருவரின் நடவடிக்கைகளும் மற்றவர்களோடு நடந்துகொள்ளும் முறைகளும், வயது, தொழில், பதவி, அதிகாரம், புலமை ஆகியவைகளுக்கேற்ப மாறுபடலாம். ஆசிரியர் அல்லது மாணவர், தலைவர் அல்லது ஊழியர், தந்தை அல்லது மகன், நோயாளி அல்லது உடல் நலம் படைத்தவர் போன்ற நிலைகளால் ஒரு மனிதரிடம் மாறுதல்கள் ஏற்படலாம்.

என்னைப் பொறுத்தமட்டில் ஒரேயொரு விதிக்கு மட்டுமே நான் கட்டுப்பட்டவன். அதுவே பிரேமை.

உன்னை அமைதிகொள்ளச் செய்து, ஆறுதலளித்து ஊக்குவித்து, உன்னை என்னோடு இணைத்துவிடும் ஆற்றல் பெற்றது பிரேமை.

(ப. 18 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமைக்கு அன்பே ஆதார சுருதி. வேலை, வழிபாடு, மெய்ஞானம் ஆகிய இந்த மூன்றும் இறைவழியில் மூன்று நிலைகள்.

மகிழ்ச்சியும், சாந்தியும் மனத்தின் நிலைகள். அவைகள், அன்பெனும் பண்பே. இனிய சுவையுடைய பழங்களின் மேற்தோல் கசப்பாக இருப்பது இயல்பு. கனியை காமம், குரோதம், உலோபம், மோகம் மதம், பொறாமை எனப்படும் அகப் பகையாகிய ஆறு கசப்பும் சுவையுமுடைய தோல்களை மூடிக் கொண்டுள்ளன. இவைகளின் வலிமையைக் குறைதது தோலை நீக்கினால் அமுதம் போன்ற இனிய சுவையுடைய அன்பினைச் சுவைத்து அதனை உடலமைப்பில் ஒன்றிடச் செய்யலாம்.

தன்னுள் பொதிந்து கிடக்கும் விலைமதிப்பிட முடியாத செல்வமாகிய அன்பை நுட்பமாகப் பரிசோதித்துத் தேடுபவர் யாரோ? அவரே சாந்தியையும் பேரின்பத்தையும் அடைய முடியும். தன்னுள் இருக்கும் விசுவாசப் பிரேமையின் ஊற்றுக் கண்ணைத் தேடிக் கண்டுபிடித்து அதனை உயிரினங்கள் அனைத்திற்கும் பகிர்ந்தளிக்க மேற்கொள்ளும் முயற்சியே சாதகம் என்று கூறப்படுகின்றது.

செல்வம், உடமைகள், அதிகாரம், பெயர், புகழ் ஆகிய இவைகள் எல்லாம் உண்மையான மதிப்புடையன அல்ல. அன்பின் செழிப்பு, அன்பெனும் அரிய உடைமை இதுவே மனிதனின் உயிர்மூச்சாக இருக்க வேண்டும். அன்பில்லாத இதயம் இருளடைந்த கோயிலைப் போன்றது. அநிவ தீய ஆசைகள் என்னும் வெளவால்கள் குடிபுக நேரிடும். அந்த வெளவால்கள் அந்த ஆலயத்தை அசுத்தமும் துர் நாற்றமும் நிறைந்த பாழ் மண்டபமாக்கிவிடும். அந்த புனிதமான இடத்தை ஒளிமயமாக்கி அங்கே வசிக்க இடம் பிடித்த தீயவர்களை விரட்டியடிக்கும் சக்தி படைத்தது அன்பின் ஒளி.

(பக். 412 - பா 3)

பிரேமைதான் என் சிறப்புத்தன்மை. என் சங்கற்பத்தினால் வரவழைக்கும் பொருள்களோ, அல்லது நான் அளிக்கும் உடல் நலனோ, மகிழ்ச்சியோ என் சிறப்பியல்பல்ல. அற்புதங்கள் என்று எதற்குப் பெயர் சூட்டுகிறீர்களோ அவை தெய்வீகத்தின் அடையாளங்கள் தான். உங்கள் அனைவரையும் வரவேற்பது என் பிரேமையே, என்னைத் தேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்களிடத்து யாத்திரையின் போது நேரும் துன்பங்களில் காப்பதற்கும் என்னைத் தூண்டி ஓடிவரச் செய்வதும் என் பிரேமையே. உன் செயல் ஒவ்வொன்றிலும் அன்பை நிரப்பு. உன் நினைவாலும் சொல்லாலும் செயலாலும் யாருக்கும் ஒரு சிறிதும் துன்பம் நேராமல் பார்த்துக் கொள் அதுவே நீ மேற் கொள்ளும் சாதகமாக இருக்கட்டும்.

அனைவரிலும் உள்ளவன் நீயே. நீ மற்றவர்களைத் துன்புறுத்தும் போது அந்தத் துன்பத்தை அனுபவிப்பவனும் நீயே, நீயே சத்திய சாயி. மற்ற அனைவரும் கூட சாயியே. ஒரே உடலைச் சேர்ந்த கை, அதே உடலின் அங்கமான கண்ணைப்பிடுங்க முயலுமா?

உன் இதயத்தில் அன்பெனும் ஒளியை ஏற்றவே நான் வந்துள்ளேன். அதனைக் கொண்டு (அந்த அன்பைக் கொண்டு) நீ எல்லோரிடத்தும் சாயியைக் காணலாம்.

(பக். 356 – பா 3)

111

ஒவ்வொருவரையும் திரிபம்பகராக அதாவது, சொல், செயல், எண்ணம் - செய்பவர், செய்கை, செயல் – சக்தி, இனிமை, ஒளி என்ற முக்கண் படைத்தவர்களாக எண்ண வேண்டும். அவர்களுள் கடவுள் வசிப்பதாக, அவர்களையே கடவுளாக எண்ணி பலனை எதிர்பாராது ஆராய்ந்து செய்யும் திறமையோடு உன்னால் செய்ய முடிந்த சேவையை அவர்களுக்குச் செய். இதற்காக தனிச் சிருடைச் சின்னங்கள் பூண வேண்டியதில்லை. துன்பத்தில் உள்ள மனிதர், உதவி தேவை என்று கேட்கட்டும் என்று காத்திருக்காதே.

தருவதும் மன்னிப்பதும் உன் இயல்பு. அதனால் உன் கண்களில் கருணையைத் தேக்கி அவனுக்கு ஒரு சகோதரனைப் போல் உதவு. சேவையின் வயிற்றில் தான் அன்பு உதிக்கிறது. சேவையின் மூலமாகவே அன்பு வளர்கிறது. கடவுளே அன்பு. அன்பே கடவுள். இந்த உண்மையைப் போதிக்கவே நான் வந்துள்ளேன்.

கொடுமை நிறைந்த இதயங்களில் அன்பெனும் விதைகளைத் தூவு. அவைகள் பயிராகி அன்பெனும் மலர்களைத் தரட்டும். அந்த அன்பு மலர்ந்து மணம் பரப்பட்டும். அன்பெனும் தூய நதி செல்லட்டும். அதில் ஒவ்வொரு சிறுவனும், பறவைகளும், பிராணிகளும், கூழாங் கற்களும் கூட அன்பெனும் பாடலைப் பாடி ஆடி மகிழட்டும்.

(பக். 355 – 358 பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV

உன் இதயக்கதவை அன்புக்காகத் திறந்து வைத்துக் கொண்டு. உன் நினைவுகள் வானை எட்டத் தலையை உயர்த்தி நட. உன்னிடம் நம்பிக்கை கொள். உன்னுள் இருக்கும் இறைவனிடம் விசுவாசம் கொள் அப்பொழுது எல்லாம் சரியாக நடந்தேறும். நீ திரும்பி நோக்கும் திசையில் எல்லாம் இருப்பவன் நானே. நீ எங்கெங்கே செல்கிறாயோ, தொடர்பு கொள்கிறாயோ அவர்களில் இருப்பவன் நானே. என்னை ஒரே ஒரு இடத்தில் தான் காணமுடியும் என்றும் மற்ற இடங்களில் நான் இல்லையென்றும் எண்ணாதே. நான் வானவெளி முழுவதும் நிறைந்திருப்பவன். நீ என்னிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்னிடமிருந்து எந்த இரகசியத்தையும் உன்னால் மறைக்க முடியாது. என் கட்டளைகளுக்குத் தகுந்தபடி வாழ்ந்து வருவாயானால் நீ பல அற்புதங்களைக் காணலாம்.

(பக். 359 – பா 3)

## V

எல்லாமதங்களும் அன்பையும் அகிம்சையையும் தான் வற்புறுத்துகின்றன. விசாரணையைத் தூண்டுகின்றன. சாயி அமைப்புக்கள் பலவிதமான மத நம்பிக்கைகள் கொண்ட மக்களோடு சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும். உன்னுள் அன்பு நிறைந்திருக்குமானால் உலகிலுள்ள அனைவராலும் நீ வரவேற்கப்படுவாய். நான் வந்ததே லோக சங்கத்தின் (உலகம் முழுவதற்கும் நலனையும் மகிழ்ச்சியையும் அளிக்கவே) பொருட்டே. நீ அனைவரோடும் இசைந்து வாழ்ந்தால் முரண்பாடு அகன்று விடும். அப்பொழுது உன் செயல் எனக்கு மகிழ்ச்சியை அளிப்பதாக நீ உறுதியாக நம்பலாம்.

(பக். 362 - பா 3)

யாராக இருந்தாலும் சரியே, அவர் தான் உறுதியாக நம்பும் கொள்கைகளுக்கு எதிராக இயங்கக் கூடாது. அப்படிச் செய்வது வஞ்சகம். இறைவனுக்கு முன் செய்யும் பாவச் செயல்.

பிரேமயோகமே இறைவனிடம் விரைவில் இட்டுச் செல்லும்.

(பக். 363 – பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கிழக்குக் கோதாவரியைச் சேர்ந்த, பணமுடையால் வருந்திய பண்டிதருக்கு எழுதிய கடிதத்தில் – (மனைவி பாபாவிற்கு கடிதமெழுத மறுத்தார்.)

நீ ஏன் உன் மனைவியை மறுத்தாய்? எனக்கே தெரியாதா? அவள் எழுதினால்தான் அல்லது ஒருவர் எழுதினால்தான் நான் அறியக்கூடுமா? நான் அறியாது இருக்கிறேனா? இதோ உதாரணங்கள்: கீதைப்பிரசங்கம் மூலமாகச் சிறு பொருள் திரட்டலாம் என்ற எண்ணத்துடன் நீ இராமச்சந்திரபுரம் சென்றாய். ஆனால் பண இழப்புடன் தான் நீ வீடு திரும்பினாய். கற்றதெல்லாம் வீணென்றும் அநுபவத்திற்கு மதிப்பேது என்றெல்லாம் நீ உன்னையே அடிக்கடி கேட்டுக் கொள்ளுவதை நான் அறியாதிருக்கிறேனா? இவ்வுலகையே காக்கும் எனக்கு, உன்னையும் உன் குடும்பத்தையும் தான் காக்க முடியாதா? இவ்வளவு துன்பங்களிற்கும் உள்ளாக்கக் காரணம் உனக்கு சில நீதிகளை புகட்டவேதான்.

வாழ்க்கை இன்பமாகக் கழியும் போது தங்களது முயற்சியின் காரணமாகக் கிடைக்கப் பெற்றது என்று மக்கள் கருதுகின்றனர். தெய்வத்தைக் கூட மறந்து விடுகின்றனர். ஆனால் தோல்வியுற்றபோது நம்பிக்கையிழந்து சிந்திக்க ஆரம்பிக்கின்றனர்.

உன் நம்பிக்கை இழப்பினால் நீ ஆத்ம தத்துவத்தையே இகழ்கிறாய். நீ ஆத்மா என்பதுதான் ஆத்மதத்துவத்தின் பொருள். அது நோவையோ அல்லது ஆனந்தத்தையோ அறிவதில்லை. நீ பல பொருள் பற்றிக் கசடறக் கற்றுள்ளாய். ஆனால் அவைகளைக் கையாண்டு அதனாலாய நற்பயனை அடைய முயற்சி செய்யவில்லை. நீ அந்த நம்பிக்கையைப் பெற்றிருப்பின் எல்லா இதயங்களின் உயிரோட்டமான ஆத்மானந்தத்திற்கு எதுவும் கேடு செய்ய இயலாதென்பதை அறிந்திருப்பாய். இதை உணர்வாயாயின் உன் வாழ்க்கைக்கு இது எவ்வளவு இன்பம் பயக்கும். சிறிது எண்ணிப்பார்! பிறகு நீ அமைதியாகவும் கலக்கமின்றியும் இருப்பாய்.

உன்னுடைய பிரசங்கங்களில் நீ ஆத்மாவைக் குறித்தும் அதனாலே மனிதன் பெறும் ஆனந்தத்தைப் பற்றியும் பேசுகிறாய். மற்றவர்களுக்கு யோசனை கூறுதல் எளிது, நீ கூறியதைச் சாதனைக்குக் கொண்டு வரும்போது நீயே அதனைத் துன்பமாய் நினைப்பாய். உன் மூளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச் திணிக்கப்பட்டிருக்கும் வேதாந்தம், சாஸ்திரம், புராணம், இதிகாசம், உபநிடதம் முதலியன உனக்குக் கோட்பாட்டையும் ஒழுங்கையுமே தந்திருக்கின்றன. இறைவனுடைய நாமத்தின் மீது எவ்வித பற்றுக்களையும் சமத்துவத்தைப் பற்றி அல்லாக, துவைதத்தையும், அச்சத்தையும், குழப்பத்தையும், நேர்மையையும் பற்றி நினைத்துப் புலம்பிக் கொண்டு காலத்தை ஏன் வீணாக்குகிறாய்?

உனக்கென ஏற்பட்ட கடமைகளில் உன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயல்படு. அதனை அஞ்சாமையுடனும் மகிழ்ச்சியுடனும் ஆற்று. அந்த நான்கு புருஷார்த்தங்களையும் அடையப் பாடுபடு. பிறகு நீ நிச்சயமாகப் பேருண்மையின் அனுபவத்தைப் பெறுவாய். சாதகம் செய். பொருளைப் பெறு. செல்வந்தர்களை நிந்திக்காதே. இல்லை, அவர்களை மட்டுமல்ல யாரையும் எவ்விதத்திலும் இகழாதே; நினைவு கொள்: ஒவ்வொருவரிடமும் சாயி வாழுகிறார். எனவே நீ மற்றொருவனை இகழும்பொழுது நீ சாயியையே இகழ்ந்தவனாகிறாய்.

உன் இதயவாசி சாயி

(பக். 83 - பா 2)

சார்ள்ஸ் பென்னுக்கு எழுதியது.

நான் உன்னுடனேயே இருந்து, உன்னை ஊக்குவிப்பதை, உனக்கு வழிகாட்டுவதை அறிந்து கொள். இதனை நீ அறிந்து கொள்வாய் என்பதனையும் நான் அறிவேன். இறைவனின் நினைவிலேயே எப்பொழுதும் இரு.

கரத்தை உயர்த்தும் ஒவ்வொரு முறையும் அதனை இறைவனுக்காக உயர்த்து.

மற்றொருவனை ஊக்குவிக்க, அவனை அமைதியாக்க அவனுக்குத் தொண்டாற்ற, கைகொடுக்க நீ கரத்தை உயர்த்தினால் நீ இறைவனுக்காக அதை உயர்த்தியவன் ஆவாய். ஏனெனில் ஒவ்வொருவரிலும் இறைவன் இருக்கிறார். அவர்களுக்குத் தொண்டாற்ற உன் திறனை எல்லாம் பயன்படுத்து. அதுதான் நீ உனக்கே தொண்டாற்றும் சிறிய நெறியாகும்.

(பக். 133 - பா 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமது அவதாரங்கள்பற்றி 26

முன்னைய தோற்றத்தில் செய்ததுபோல இப்பொழுது எல்லாம் அறியமை அலட்சியம், பணிவில்லாமை, தற்பெருமை பாராட்டல் முதலிய தீய குணங்களை காணும் போது நான் கோபமும் கண்டிப்பும் கொள்வதில்லை.

சமையலறைக்குள் புகுந்து தன்வேலைக்குத் தடையாக இருக்கும் பொழுது, தாயார் குழந்தைகளிடத்து கண்டிப்பாக இருப்பார். ஆனால் சமைத்த உணவை பரிமாறும் பொழுதோ அவள் ஆனந்தமும் பொறுமையும் உருவானவளாகக் காணப்படுவாள். அந்த அவதாரத்தின் பொழுது உணவு சமைத்துக் கொண்டிருந்தேன். அதனால் உங்களிடம் கண்டிப்பாக நடந்து கொண்டேன், ஆனால் இப்பொழுதோ சமைத்த உணவை பரிமாறுகிறேன். நீங்கள் எங்கிருந்தாலும் பக்தியாகிய தட்டத்தை மட்டும் முன்னால் வைத்து அமருங்கள் நீங்கள் திருப்தியடையுமாறு அன்போடு பரிமாறுவேன்.

(ப. 232 - பா 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரும் நடக்க வேண்டிய விதிமுறைகளை விளக்கும் போது—

உன்னுடைய கடமையை நீ செவ்வனே ஆற்றுக. அப்படி ஆற்றும் போது இறைவனின் முன்னிலையில் ஆற்றுவதாக நினை. அஷ்டமா சித்திகளுக்கு ஆசைப்படாதே. அது சாதகனை மாயா உலகில் தள்ளி மீளவிடாது. வாழ்க்கை என்னும் இந்த அடர்ந்த கானகத்தில் பரம் பொருளின் நாமமாகிய துணையைக் கெட்டியாகப் பற்றிக் கொள். அதுவே போதுமானது. உனது இதயமாகிய தோட்டத்தை சத்குணங்களாகிய எருக்களைக் கொண்டு மனதாகிய ஏரைப்பூட்டி உழுவாயாக இந்த ஏர்த் தொழில் செய்யும் பொழுது நல்லது கெட்டதைப் பிரித்துணரும் அறிவைச் சாட்டையாக கொள்க.

பெரும் துணிவாகிய உரத்தைப்போடு. அன்பாகிய விதைகளை விதை. பக்தியாகிய மழை பொழியட்டும். உணர்ச்சியாகிய களைகளைப்பிடுங்கு. அப்பொழுது நீ பிரம்மானந்தம் என்னும் விளைவைப் பெற்றவனாகிறாய்.

(ப 126 - பா 1)

பார்வையில்:

ஒவ்வொருவரும் கண்ணாடிகளை அணிந்து கொண்டு உலகத்தைப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்க்கும் உலகம் அவர்கள் அணிந்துள்ள கண்ணாடியைப் பொறுத்ததே. கோபம், வெறுப்பு, துன்பம், பேராசை, பொறாமை, ஆகிய கண்ணாடிகளை அணிந்து கொண்டு பார்த்தால் கண்களுக்குத் தெரிவதும் அதுவேதான். இல்லையா? நான், அன்பு என்ற கண்ணாடியை அணிந்துள்ளேன்.

அதனால் எவரையும் என்னால் வெறுக்க முடியவில்லை. வெறுக்க நினைத்தாலும் முடிவதில்லை. வெறுப்பும் கோபமும் என்னைத் தொடுவதில்லை. நோயும் என்னை நெருங்குவதில்லை. ஆனால் நான் உங்களை அச்சுறுத்தித் திருத்துவதுண்டு. நானே பேரின்பம். பேரின்பமே நான். ஞானம், ஆனந்தம், சாந்தி அனைத்தும் நானே. அதுவே என் உண்மைத்தன்மை.

(ப 164 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிமுறைகள்:**

கடந்த காலத்தையே எண்ணி வருந்திக் கொண்டு எதிரிடையான புண்படுத்தக் கூடிய துன்பியலான, அபாயகரமான அனுபவங்களிலேயே ஆழ்ந்து போய்க் காலத்தை வீணாக்குவது கூடாது விரைந்து செல்லும் ஒவ்வொரு கணப்பொழுதும் ஆன்மாவுக்கு முழுவாழ்க்கைக் காலமாகலாம். அற்பமான செயல்களை உதறித்தள்ளு. விண்மீன்களைபோல உறுதியாக நில்.

உன் அன்பை அனைவருக்கும் வெளிப்படுத்து புதிய வழிமுறைகளை ஆராய்வதில் கவனத்தைச் செலுத்து. அதிகமாகப் பேசாதே. அதிகமான மனிதர்களிடமும் பேசிக்கொண்டிராதே.

உன்னுடைய உண்மையான நண்பனும் தோழனும் இறைவனே. நீ உணர்ந்ததற்கொப்ப நடந்து கொள். ஏழை, பணக்காரன்; நோயாளி உடல்நலம் படைத்தவன் இவர்களுக்கு இடையில் உனக்கு வித்தியாசம் தோன்றுமானால் ஏழைக்கு, நோயாளிக்கு உதவு. மனத்தில் சேர்ந்த அழுக்கை, பிரமையை, அகந்தையை, கொடுமையை, புலன்களின் குழம்பை, கர்ம பலன்களின் முத்திரைகளை மனதிலிருந்து அகற்றுவதே, டை. மைன்ட் (Die - mind), அதாவது மனதை மறையச் செய்வதாகும் அவைகள் அகன்ற பிறகு அங்கு மிகுந்து நிற்கும் உள்ளொளியால் அந்த அளவுக்கு மனம் மிகுந்த பிரகாசத்தையும் தெளிவையும் பெறுகிறது. அப்பொழுது மனம் (Diamond) வைரத்தைப் போல பிரகாசத்தைப் பெறுகிறது. அதாவது வைரத்தைச் செதுக்கி பட்டை தீட்டுவதன் மூலம் அதற்கு பிரகாசமும், மதிப்பும் கூடுவதைப் போன்ற செயல் அது. பாபா (Baba) என்றால் சத் சித் ஆனந்த சொரூபமான பரமாத்மா என்று பொருள். பாபா என்ற பெயரின் ஆங்கில எழுத்துக்களில் முதல் எழுத்தான பி இருத்தல். (Being) அது சத். இரண்டாவதெழுத்தான ஏ அறிந்திருத்தல். (Awarness) இது சித் மூன்றாவது எழுததான பி பேரானந்தம். (Bliss) அது ஆனந்தம். நான்காவது எழுத்தான ஏ ஆத்மா (Atma) அது பரமாத்மா. ஆசை, மாயை ஆகியவைகளைக் களைத்தெறிந்தால் நீங்களும் கூட நானாக ஆகி விடலாம்.

(பக் 174 - பா 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறுவிதங்களில் 28

## 1) பிறந்த நாளில்

நான் என்றைக்கு உங்கள் உள்ளங்களில் அன்பின் வடிவில் பிறக்கிறேனோ, அந்த நாளைத்தான் நீங்கள் என் பிறந்த நாளாகக் கொண்டாட வேண்டும்.

(பக். 270 - பா 3)

## 2) பஜனை

பிரார்த்தனைக் கூட்டங்களில் இறைவன் புகழ்பாடும் கூட்டப் பஜனை முறையினால் வெளிப்புறமும உட்புறமும் நிலவும் சூழ்நிலை அன்பினால் நிரப்பப்படுகிறது.

(பக். 294 - பா 3)

## 3) முழுமையான தெய்வீகத்தைக் காண

உலகத்தில் காணப்படும் ஒவ்வொரு அணுவிலும் இறைவன் நிறைந்திருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பிரபஞ்சமே அவருடைய உடல். உனக்குக் கண்கள் இருந்தால் நீ அவரைக் காணலாம். நீ அந்தத் தெய்வீக ஒளிப்பிழம்பின் ஒரு பொறி. எல்லாப் பொருள்களும் அத்தகையனவே. ஒவ்வொரு உயிரிலும் தெய்வீகத்தைக் காண்பதற்கு முன் அதனை முழுமையாக நீ உன்னிலேயே காண வேண்டும். அதாவது உன் சொல்லிலும் செயலிலும் நினைவிலும் தெய்வீகம் நிரம்பியிருக்க வேண்டும். நடமாடும் ஆலயங்களாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ளேயும் ஆண்டவன் உறைகிறான் என்ற உண்மையை மறக்கக் கூடாது. உங்களைப் பாதுகாப்பவரும், அழிவுக்கு இட்டுச் செல்லும் தீய உணர்வுகளுக்கு இரையாகாமல் உங்களைக் காப்பவரும் அவரே.

(பக் 307 - பா3)

## 4) அற்புதங்கள்

என் செயல்கள் தெய்வீக சக்திக்கான சான்றுகள். தெய்வீகத்திற்கான அடையாளங்கள். பிரேமையின் தூண்டுதலால் நான் பொருள்களை வழங்குகின்றேன். என் பிரேமை வற்றாதது. எனக்கு எந்தவித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான விருப்பமும் இல்லை. நான் அன்பைப்பற்றிப் பேசுகிறேன், அன்பின் வழியில் அழைத்துச் செல்லுகிறேன். அன்பே நான்.

(பக் 207 – பா 1)

5) குழந்தையைச் சமாதானப்படுத்த முயலும் ஒரு தாயைப் பார்த்து

பார், உன்னுடைய இடையின் மேல் அமர்ந்து கொண்டே, தாயாரே தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதையும் உணராமல் குழந்தை ''அம்மா, அம்மா'' என்று கத்துகிறது. உண்மையில் ஒவ்வொருவரும் இது போலவேதான் செய்கின்றனர். இறைவனாகிய அன்னையே தங்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றாள் என்பதை உணர்ந்து கொள்ளாமல் ''அம்மா அம்மா'' என்று கத்துகிறார்கள்.

(பக் 264 – பா 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவரவர்களுக்கு ஏற்றவகையில் 29

பள்ளிக் குழந்தைகளுக்கு:

வருங்காலச் சந்ததியினர் அமைதியோடும் வளத்தோடும் வாழ வேண்டுமென்பதற்காக, முற்காலத்தில் வாழ்ந்த முனிவர்களும், சாதுக்களும் எத்தனையோ துன்ப துயரங்களுக்கிடையில் கட்டிமுடித்த சனாதன தர்மம் எனப்படும் விசாலமான மாளிகை இன்று குடியிருக்கத் தகுதியற்றது என ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டது. பழுதடைந்தது என்று முடிவுசெய்யப்பட்டுவிட்டது. அந்த மகான்கள் கொண்டிருந்த அமைதியை இந்தக் குழந்தைகளின் முகங்களில்தான் காணமுடிகிறது. பொறாமை, பேராசை, வெறுப்பு முதலியவை இவர்களின் இதயங்களில் சேராததால் இவர்களின் முகங்களில் அமைதி நிலவுகிறது. இவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது மகிழ்ச்சி துக்கமாகவும், அமைதி குன்றி பயமாகவும் மாறிவிடும். அமைதியையும் மகிழ்ச்சியையும் பெறும் வழிகளை மக்கள் மறந்துவிட்டார்கள். அவைகளைத் தம்மோடு இருத்திக்கொள்ளவும் பரப்பவும் இன்று அவர்களுக்குத் தெரியவில்லை.

மரியாதை, பக்தி, ஒருவருக்கொருவர் உதவி, ஒற்றுமை ஆகிய நற்பண்புகளின் சூழலில் குழந்தைகளை வளர்க்க வேண்டும். இப்பொழுது சிறுவர்கள் புத்தகங்களைப் பிரதி எடுக்க மட்டுமே கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நற்குணங்களைப் பயிலுவதற்கான உண்மையான தூண்டுதல்களின்றி வளர்ந்து வருகிறார்கள். பெற்றோர்கள் மதுபானம், சூதாட்டம், பிறரை நிந்தித்தல், பொய்மொழி புகலல் போன்ற தீய செயல்களை இந்த இளஞ் சிறுவர்களின் கண்ணெதிரே செய்து, அவர்களின் இளம் உள்ளங்களைக் கெடுக்கிறார்கள். சாதி, இனம், மதம், மதப்பிரிவுகள் ஆகியவைகளின்மேல் வெறுப்பு, நிந்தனை ஆகியவை குழந்தைகளின் மனதில் வளரவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முதலில் பெற்றோர்கள், பின்னர் ஆசிரியர்கள், விளையாட்டுத் தோழர்கள், நண்பர்கள் இறுதியாக, சமுதாய ஒரு பிரதேச மக்களின் தலைவர்களாகிய இவர்கள் அனைவரும் இந்த நாட்டுச் சிறுவர் சிறுமியரிடம் மிகுந்த எச்சரிக்கையோடு தம்மைத் தாமே பரிசோதித்துக் கொண்டு உதாரணமாக விளங்க முயற்சிக்க வேண்டும்.

(ப. 225 – பா 3)

மாணவிகளுக்கு:

நீங்கள் உங்கள் புத்தகங்களைக் கவனமாகப் போற்றிவரவேண்டும். அவைகளை உங்களுக்கு வாங்கி அளிக்க உங்கள் பெற்றோர் செய்திருக்கும் தியாகத்தை எண்ணிப்பாருங்கள். சகோதர சகோதரிகளோடு பூசல் விளைவித்துக்கொண்டு உங்கள் வீட்டைக் கலகத்தின் பண்ணை ஆகக வேண்டாம்.

பொருள் படைத்திருக்கும் உங்கள் பள்ளித் தோழியரைப் பார்த்துப் பொறாமைப்படாதீர்கள். ஆடம்பரமாகவும் அலங்கரித்துக் கொள்ளலாகாது. எப்போதும் உண்மையே பேசுங்கள். பொய்யுரைப்பது கோழையின் செயல். அதிகாலை ஐந்து மணிக்கே எழுந்துகொள்ள வேண்டும். கை கால் சுத்தம் செய்தபின் தனிமையத்தில் அமைதியாக அமர்ந்து இறைவனின் திருநாமத்தைத் தியானம் செய்யுங்கள். இரவு 9 மணிககு உறங்கச் செல்வது நலம். அப்படி நித்திரைக்குப் போகுமுன் இறைவனை நினைத்துப் பிரார்த்தனை செய்யுங்கள். அன்று பகல் முழுவதும் உண்மையுடனும் கடமை உணர்ச்சியுடனும் ஆற்றிய செயல்களை அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு இறைவனை வேண்டுங்கள். சேவை செய்வதற்கு அன்பும் ஆற்றலும் அருளுமாறு வேண்டுங்கள். உங்களுக்காகப் புலரும் நாளுக்காக, காலையில் அவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அந்நாளை நன்னாளாக ஆக்கிக்கொள்ளும் திறமையையும் அருளுமாறு இறைஞ்சுங்கள்.

(ப. 269 - பா 1)

விவசாயிகளுக்கு:

நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி உழுது பயிரிட்டு குப்பையையும் புழுதியையும் இங்கு சுவையும் ஊட்டமும் ஊட்டும் தானியங்களாக மாற்றுகிறீர்கள். உங்கள் பணி புனிதமானது. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உழைப்பின் மீதும், இறைவனின் கருணையின் மீதும் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். நீல வானத்தின் கீழ் மெல்லிய காற்றில் ஆனந்தமாக அசைந்தாடும் வயல்களின் வரம்பால் போவது எவ்வளவு ஆனந்தமாக இருக்கும். அப்படிப் போகும் போதெல்லாம் இறைவனின் புகழைப் பாடிக்கொண்டு போனால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவனே அந்த அழகிலும், வளத்திலும், பெருமையிலும் கலந்து இருக்கின்றான் அல்லவா? இறைவனின் திருநாமத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிச் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்குங்கள். கோபங்கொண்டு கொடிய வார்த்தைகளைப் பேசி இந்த இன்பமான சூழ்நிலையைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.

(ப. 261 - 270 பா. 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளருக்கு-

இதில் பணிபுரிபவர்களில் எவர் செய்யும் பணி மிகவும் முக்கியமானது? இதனைக் கண்டுபிடித்துக் கூறுவது சிரமமே. இதில் ஒவ்வொரு சிறுசெயலும் முக்கியமானதே. மொத்த அமைப்பில் தன் பங்கைச் சரிவரச் செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் அதில் உரிமை பெறுகிறான். ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்க்கவோ, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று வழக்காடவோ முயலக்கூடாது. அத்தகைய முயற்சிகள் பகையை வளர்க்கும். அன்பும் சகிப்புத்தன்மையும் பெருகுவதை அடைத்துவிடும்,

இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்: ஒரு மனிதன் காட்டுவழியில் சென்று கொண்டிருக்கிறான். வழியில் உள்ள மரம் ஒன்றில் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருப்பதை அவன் கண்கள் பார்க்கின்றன. அவைகள் இனிய சுவையுடைய பழங்கள் என்றும், அவைகளைப் பறித்தால் பசியாற உண்ணலாம் என்றும் அவனுடைய கண்கள் கூறுகின்றன. அவனுடைய கால்கள் அவனை மரத்திற்கு அருகில் கொண்டு செல்கின்றன. முதுகு, இடுப்புத் தசைகள் வளைவதால் அந்த மனிதன் குனிகிறான். அவன் கை கீழே உள்ள கல்லை எடுக்க நீளுகிறது. விரல்கள் கல்லைப் பற்றி எடுக்கின்றன. பழங்களை நோக்கிக் கல்லை எறியும் போது தோள்கள் அகற்ந்து போதுமான சக்தியை அளிக்கின்றன. பழம் ஒன்று கீழே விழுகின்றது. அதோடு எல்லாம் முடிந்துவிடவில்லை. உடலில் அவயவங்கள் செய்யவேண்டிய வேலைகள் இனியும் இருக்கின்றன. விரல்கள் பழத்தை எடுத்து வாயில் திணிக்கின்றன. நாக்கு அதனைப் பற்களுக்கிடையில் திணிக்கின்றது. தள்ளுகிறது. பற்கள் அதனை மெல்லுகின்றன. தொண்டை அதனை விழுங்கி உள்ளே செலுத்துகிறது. இதில் எந்த அவயவத்தின் பணி முக்கியமானது? எது முக்கியமற்றது? எந்த அவயவம் அதிகமாக உழைத்தது? எது குறைவாகச் செய்தது? அவயவங்கள் ஒவ்வொன்றும் திறமையோடு தாம் செய்ய வேண்டிய வேலையைச் சரிவரச் செய்ததால்தான் மரத்திலிருந்த பழம் பசியோடிருந்த வயிற்றுக்குள் சென்றது. ஒவ்வொரு தொழிலாளியையும் பொதுப் பணிக்கு, தன் விலையுயர்ந்த பொருளைத் தந்துதவும் கொடைவள்ளலாக நாம் மதிக்க வேண்டும்.

எல்லோரையும் தெய்வீகம் நிறைந்தவர்களாக எண்ணி அனைவரையும் சமமாக நேசிக்க வேண்டும். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஆனந்தமளிக்கும் சிறந்த சாதகம் இதுவே.

(ப. 434)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிமா சங்கத்தினருக்கு:

சிறந்த பெயரான அரிமாவின் பெயரை ஏற்றிருக்கும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் நீங்கள். சிங்கமும் யானையும் ஒன்றுக்கொன்று எதிரிகள் என்பது காவிய சம்பிரதாயம். இதில் ஒரு சிறந்த கருத்து நிறைந்திருக்கிறது. யானை இருண்டு அடர்ந்து பின்னிக்கொண்டிருக்கும் காடுகளில் மூர்க்கத்தனமாக சுதந்திரமாக அலைந்து திரிகிறது. ஆசைகள் சபலங்கள் ஆகியவைகளால் தூண்டப்பட்டு அலைந்து திரியும் மனத்தை உருவகப்படுத்துகிறது யானை. ஆனால் திறமையும் வலிமையும் படைத்த சிங்கத்தின் முன் அடிபணிந்துவிடுகிறது அது. சிங்கம், புத்தி. யானை மனம். உண்மை பொய், அழியக்கூடியது அழியாதது, ஆகியவைகளைப் பிரித்து உணரக்கூடிய பகுத்தறிவு உணர்த்தும் தெளிவினை அசட்டை செய்தால் மனிதன் மயக்கத்திலாழ்ந்துவிடுகிறான், மாயையால் அலைக்கழிக்கப்படுகிறான். புத்தியைக் கூர்மையாக்கி உயர்த்தினால், அமைதியும் ஒப்புரவும் ஏற்படும். எல்லாக் குழப்பங்கள், பேதங்கள் ஆகியவைகளுக்கும் பின்னேயுள்ள உண்மைப் பொருளை புத்தி வெளிப்படுத்துகிறது.

துன்பத்திற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, பின்னர் அவைகளை போக்குவதற்கான நிச்சயமான வழிகளைப் பின்பற்றாமல், வெறும் இரக்கத்தாலும் ஆர்வத்தாலும் தூண்டப்பட்டுச் செய்யும் சேவை பயனற்றது. அது அபாயத்தைக்கூட விளைவிக்கலாம்.

எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணம் அறியாமையே. பலவாகத் தோன்றும் பொருள்களின் உள்ளே குடிகொண்டிருக்கும் ஏகமான பொருளை அறிவிக்கும் ஞானம் இன்மையால்தான், துன்பங்கள் தோன்றுகின்றன என்பது வெளிப்படை. அந்த துன்பங்களை வேரோடு கிள்ளி எறிவதற்கான சிறந்த நிச்சயமான வழி அறியாமையைப் போக்குவது தான். அறியாமையை அகற்றுவதன் மூலமாக உண்மையை உணர்ந்து கொண்டு விடுவதால், துன்பங்கள் அழிந்து போகின்றன.

(ப. 239 - பா 3)

கவிஞர்களுக்கு:

கடவுளை அறிந்துகொள்ள வேண்டும் என்ற தவிப்பை உண்டு பண்ணுவதே சிறந்த கவிதை. கவிதைகளில் அந்தத் தவிப்பைத் [illegible]க்கும் அமிருதத்தை நிறைத்துத் தந்தால் அது மக்களுக்குத் திருப்தியை அளித்து உலகியல் செல்வம் தரும் இன்பங்களைக் கண்டு [illegible] நிலையாடும் வலிமையைப் பெறுவார்கள். தனக்குள்ளும் தன்னைச் சுற்றிலு

முன்னை அனைவருக்குள்ளும் உள்ள ஞான ஊற்றுக் கண்களைத் தொட உதவாத, ஆன்மீக சாதகத்தைத் தூண்டாத, மனச்சாட்சியை விரிவடையச் செய்யாத, இரக்க குணத்தைக் கொடுக்காத, அறிவுத்தெளிவை அளிக்காத கவிதை பயனற்றது. அது வெறும் பொழுது போக்குச் சாதனமே.

(ப. 362 - பா. 3)

அகில பாரத பிரசாந்தி வித்வன் சபையில்:

தமசோமா ஜோதிர்கமய (இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்க.) அறியாமையை வித்தாகக் கொண்ட இப்பிரபஞ்சத்தின் அஞ்ஞானத்தை வேரோடு களைந்தெறி. மூலாதாரமான கடலில் தனி மனிதன் ஓர் அலை. கிராமம் கிராமமாகச் சென்று ஞானதீபத்தை ஏற்றுங்கள். இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் மனிதனுக்கு விடுதலையின் நம்பிக்கையைச் சிறுகச் சிறுகப் புகட்டுங்கள். அதாவது ஆத்மாவிலும் ஆத்ம தத்துவத்திலும் நம்பிக்கையை ஊட்டுங்கள் என்பதாம். நீங்கள் கற்றதையும் அனுபவிப்பதையும் அன்புடனும் கருணையுடனும் அவைகளை அறிய ஆவல் உள்ளவர்களுடனும் காப்பாற்றப்பட வேண்டியவர்களுடனும் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களது தகுதியையும், பண்பையும், நினைவுபடுத்துங்கள். ஒருவருடைய நம்பிக்கையைத் தகர்க்கும் பணியில் ஈடுபடாதீர்கள். புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்தி அதனை வளர்க்கும் பணியில் இறங்காதீர்கள். ஆன்மீக முன்னேற்றத்திற்கான முயற்சியை வளரச் செய்யுங்கள். நம்பிக்கை என்பது ஓர் அருமையான செடி. கொடுமையின் புயல் அதனை வாடச் செய்துவிடும். மக்களிடம் அன்பு காட்டுங்கள். ஆதரவு நல்குங்கள். அன்பு, பொறுமை, அடக்கம், தொண்டு, தியாகம், ஆகியவை யாரிடமாவது தோன்றுமானால் அவைகள் செழித்து வளர ஆவன செய்யுங்கள்.

(ப. 71 - பா 2)

கம்பாலாவில்......

மொழி மதம் இனத்திற்கு அப்பால்......

அன்புருவானவர்களே சுயநலத்தூண்டுதல்களினால் அன்பு அணையாதபடி சீர்படுத்துங்கள். உங்கள் பெயரிற்கும் உயர்ந்த பாரம்பரியத்திற்கும் இழுக்கு நேராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அகில உலக மொழியாக இதயம் பேசும் மொழியைக் கற்றுக்கொண்டு அதனை செயல் மூலம் தெரிவியுங்கள். நீங்கள் வணங்கும் அதே இறைவனிடம் தான் அயலவரும் [illegible]த்தைத் கிடைக்கும்படி பிரார்த்திக்கிறார்கள்." அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் மொழி வேறுபடலாம், வழிபாட்டு முறை மாறுபடலாம். ஆனால் அவர்களின் சுவைகளும் உங்களுடைய தேவைகளைப் போன்றதே. உங்களைப்போலத்தான் அவர்களும் உணவையும் பானத்தையும் அருந்துகிறார்கள். ஆனால் மற்றவர்கள் துன்புறும்போது இரக்கம் கொள்ளுங்கள். அவர்களுடைய ஆனந்தத்தில் பங்கு கொள்ளுங்கள். இவ்வாறு பங்குகொள்ளும்போது ஆனந்தம் கைவல்ய ஆனந்தமாக மாறுகிறது.

உங்கள் அன்பு விசாலமடைந்து படைப்பு முழுவதையும் தழுவட்டும். நீர் தேங்கிக் கிடக்குமானால் அது நாற்றமெடுத்துவிடும். அதனைப் பெருக்கெடுத்து ஓட விடுங்கள்.

அன்பே ஆனந்தம்
அன்பே சக்தி
அன்பே பிரகாசம்
அன்பே கடவுள்

என் வாழ்க்கை முற்றுமே நான் உங்களுக்கு அளிக்கும் செய்தி. எனக்கு ஏதாவது பெயரிட வேண்டுமென்று விரும்பினால் என்னைப் பிரேமஸ்வரூபன் என்று கூப்பிடுங்கள்.

(ப. 310 - பர 3)

த்தரவாதம் தரும் நம்பிக்கையில் மனம் மகிழுங்கள். அதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். 30

"வெறுப்பு' பாவம் என்னும் சதுப்பு நிலத்தில் அமிழ்ந்து தவறுகளினால் தன்னையே இழந்து நிற்கும் மனிதகுலத்தைச் சரியான வழியில் அன்பைச் சொரிந்து அழைத்துச் செல்ல...... ... இரத்த தாகம் கொண்டலையும் பாவங்களின் சுமையைத் தாங்கமாட்டாமல் தனிக்கும் உலகின் இதயத்தை சுத்திகரிக்க......... கொடுமையின் கோரமான குளம்புகளால் மிதிபட்டு அனாதைகளாக அழுதுகொண்டு நிற்கும் நல்லவர்களைச் சீராட்ட, பாதுகாக்க, விடுவிக்க......... கிழானை, அழுகிப் போன, புனிதம் கெட்ட நாவுகள் கடவுள் என்ற சொல்லையே நசிக்கச் செய்கையில் அதை (அந்த வார்த்தையின் மகிமையை) வெளிப்படுத்த, தெளிவாக்க, பறைசாற்ற......... பூமியின் பாரத்தைக் குறைக்க, மனிதனின் (தெய்வ) நம்பிக்கையை உறுதிப்படுத்த, மனிதர்களின் இடையில் மனிதனாக, கடவுள் வந்தார் (என்ற) எக்காள முழக்கம் தெளிவாகக் கேட்கிறதா?

பிறப்பு இறப்பென்னும் அலைகளால் மோதுண்டு கலக்கமுற்கப் பட்டு, திணறித் தவிக்கும் மனிதா! ஒரு வினாடி உன்னை நிதானப் படுத்திக் கொண்டு, கவனித்துப்பார்! இதோ, உன் கைக்கெட்டும் தூரத்தில் ஸ்ரீ சத்திய சாயி என்னும் பாதுகாப்புப்படகு மிதக்கிறது. கெட்டியாகப் பற்றிக்கொள்!"

(ப. 355 - பா 2)

# அன்பே பிரதானம்
# சகோதர அன்பே பிரதானம்

பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விசுவாசம் இவைகளில் எல்லாம்

— அன்பே பிரதானம்

பல பல பாஷை படித்திருந்தாலும்
கல கல என்னும் கைமணியாமே

— அன்பே பிரதானம்

என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பில்லை யானால் அதிற்பயன் இல்லை

— அன்பே பிரதானம்

சாந்தமும் தயவும் சகல நற் குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள

— அன்பே பிரதானம்

சகோதர அன்பே பிரதானம்
அன்பே பிரதானம் சகோதர அன்பே பிரதானம்

❊ ❊ ❊

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந் திலார்
அன்பே சிவ மாவ தாரு மறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.

— திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடைய இடம்

எனக்கென்று ஒரு சிறு நிலமும் இல்லை,
எனக்காக நான் பயிரிடுவதுமில்லை·
எல்லா நிலமும் ஏனையோர் எப்பொழுதோ
தங்களுக்கென உறுதி எழுதிக்
கொண்டு விட்டனர்.
ஆனால் எனக்கும் ஒரு நிலமிருக்கிறது.
அதுதான்,
நீர் வற்றிய குளத்தின் பரப்பினை ஒத்துள்ள
துன்புற்றோரின்
கவலை மிக்க இதயமாகும்.
அத்தகையோர் இதயமாகிய நிலத்தில்
மகிழ்ச்சியாகிய பயிரை நான்
விளைவிக்கிறேன். அதுவே எனக்குத் தந்த
உணவும் ஆம்.

(பக். 24 - பா 1)

விலை: 25·00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org